# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 03.11.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# இணைந்த வடக்கு, கிழக்கில் உயர்ந்தபட்ச சமஷ்டியே இனப்பிரச்சினைக்கான தீர்வாகும்



## மின் தடை இல்லை

நாட்டில் இன்று அல்லது நாளை மின்தடை ஏற்படாது எனவும், அது குறித்த சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி பெர்டினாண்டோ இதனைக் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மின்சாரசபை ஊழியர்களும் நாளை நண்பகல் 12 மணிக்கு கொழும்பு தலைமை

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் மக்கள் கூட்டணி!



(வாஸ் கூஞ்ஞ)

இந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் அமைந்திருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும். எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்போம்

### ஸ்டாலின் தெரிவிப்பு




என்றைக்கும் தி.மு.க. வினர் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதே நேரம், உடன்பிறப்பாக நினைத்துக் கொள்ளுங்கள், இலங்கைத் தமிழர்களுக்கு இந்த அரசு உற்ற துணையாக நிற்கும் என ஸ்டாலின் நம்பிக்கை அளித்திருக்கிறார்.

புலம்பெயர் இலங்கைத் தமிழர்களுக்கு ரூ.225.86 கோடியில் புதிய திட்டங்களை வேலூரில் நடைபெற்ற நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துள்ளார்.

அத்தோடு வேலூர் சென்ற தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் மேல்மொணவூரில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

இதன்போது, முகாமில் உள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகள் குறித்து முதலமைச்சர் கேட்டறிந்தார்.

தமிழகத்தில் புலம்பெயர்ந்த

02 ஆம் பக்கத்தில்...

## கல்லடி பாலத்திற்கு அருகில் காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்கள் பிரதேச மக்களால் துரத்தியடிப்பு




(சுமன்)

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் உள்ள வடிச்சல் நிலப்பகுதியினை நேற்று காலை வேலியிட்டு அடைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிரதேச மக்களினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கல்லடியை ஊடறுத்து கல்லடி பாலத்தினை இணைக்கும் வகையில் உள்ள குறித்த வடிச்சல் பகுதியை இன்று சிலர் வேலியிட்டு அடைக்க முற்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் உள்ள கிராம

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ்- முஸ்லீம் தரப்புகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது



(யாழ்கீதன்)

தமிழ் தரப்புக்களும் முஸ்லீம் தரப்புகளும் தேர்தல் உட்பட அனைத்து நடவடிக்கையிலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் மிக வேகமாக உணரப்பட்டு இருக்கின்றது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில்

02 ஆம் பக்கத்தில்...

## வாக்களித்த மக்கள் துன்பத்தில் இருப்பதை புரிந்துகொள்ள வேண்டும்; பிரதமர் மகிந்த



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த மக்கள் தற்போது மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளதை புரிந்துகொள்ள வேண்டும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

'பெருமையுடன் சுபீட்சத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஐந்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஒழுக்கம் இல்லாத கல்வியை சமூகம் ஏற்காது!



பரீட்சைகளில் சித்திபெற்று பல்கலைக் கழகம் சென்று பட்டதாரிகளாகவும், புத்திஜீவிகளாகவும் பட்டங்களை பெற்றாலும் ஒழுக்கம் இல்லாதவனை சமூகம் மதிக்காது என்பதே நாம் வாழ்க்கையில் கண்ட உண்மை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,

02 ஆம் பக்கத்தில்...

## இராணுவ சிப்பாய் வாகன விபத்தில் பலி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதியின் தம்பலகாமம் சந்திக்கு அருகாமையில் இரவு 7 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்தவர் கந்தளாவ,கந்தளாய் எனும்

02 ஆம் பக்கத்தில்...










## இராணுவ சிப்பாய் வாகன விபத்தில் பலி

முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட இராணுவ சிப்பாயான அகில மல்சாந் வயது (22) எனவும் தெரியவருகிறது.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது இளைஞன் வீதியை கடக்க முற்பட்ட போது வாகனம் மோதி விட்டு சாரதி தப்பிச் சென்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரனையின் போது தெரியவருகிறது.

மோதி விட்டு தப்பிச் சென்ற வாகன சாரதியை கைது செய்ய தேடுதல் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் நேற்று (2)ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஒழுக்கம் இல்லாத கல்வியை சமூகம் ஏற்காது

இலங்கை தமிழரசு கட்சி ஊடகசெயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவரும், உதயகுமார் கல்வி நிலைய தலைமை ஆலோசகருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு படுவான்கரைபெருநிலம் மட்/ மமே/ கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் கடந்த 2020, க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை உதயகுமார் கல்வி நிறுவனம் மூலம் அதிபர் அ.விக்கினேஷ்வரன் தலைமையில் இன்று இடம்பெற்ற பாராட்டு' நிகழ்வில் கலந்து கொண்டு மேலும் உரையாற்றுகையில்.

தமிழினத்தின் வளர்ச்சியும் உயர்ச்சியும் இன்று கல்வியிலேயே தங்கியுள்ளது. கல்வி என்பதற்கும் அறிவு என்பதற்கும் வித்தியாசங்கள் உண்டு.

புறத்தில் இருந்து அகத்துக்கு செல்வது கல்வியாகும், அகத்தில் இருந்து புறத்திற்கு செல்வது அறிவாகும்.

ஆசியர்கள்தாம் புறத்தில் இருந்து பெற்ற கல்வியை மாணவர்களுக்கு ஊட்டும் போது அது அறிவாக மாணவர்களை சென்றடைகிறது.

மாணவர்கள் அந்த கல்வியூடாக பரீட்சைகளில் தோற்றும்போது அறிவாக பயன்படுகிறது அதாவது ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றுவது கல்வியாகும் அந்த ஆற்றலை நடைமுறைரீதியாக செயல்படுத்துவது அறிவாகும் இதுதான் கல்விக்கும் அறிவுக்கும் உள்ள வேறுபாடாகும். மாணவர்களை ஆசியர்கள் கற்பித்தல் செய்யும்போது மாணவர்களின் ஐந்து புலன்களும் ஆசியர்கள் கற்பிக்கும் பாடத்தின்மீது கவனம் செலுத்தவேண்டும்.

வெறுமனமே மாணவர்கள் பரீட்சைக்கான கல்வியில் சித்திபெற்று வாழ்க்கைக்கான கல்வியாக அறிவை பயன்படுத்தவேண்டும்.

கல்வியில் மாணவர்களை உயர்த்தவேண்டும் என்ற சிந்தனையில் எமது படுவான்கரை பெருநிலம் கற்சேனை கிராமத்தில் பிறந்து முனைக்காடு கிழக்கில் திருமணம் முடித்து இன்று மத்திய கிழக்கு நாட்டில் தொழில் புரியும் தமிழ்தேசிய பற்றாளனான தம்பி உதயகுமார் தனது தனி முயற்சியால் அவரின் சொந்த மாத வேதனத்தில் இருந்து மூன்றில் ஒரு பங்கை கல்வியின் வளர்ச்சிக்காக செலவிட்டு மாணவர்களின் கல்வி செயல்பாட்டை படுவான்கரை பெருநிலத்தில் ஊக்குவிக்கும் திட்டமாகவே அவரால் உருவாக்கப்பட்டது இந்த உதயகுமார் கல்வி நிறுவனம் முனைக்காட்டு கிராமத்தில் இதற்கான அலுவலகத்தை ஏற்படுத்தி அளப்பரிய சேவையாற்றி வருகிறார்.

அந்த கல்வி நிறுவனத்திற்கு என்னை தலைமை ஆலோசகராக நியமித்து எனது ஆலோசனைகளையும் உள்வாங்கி பல கல்வி சமூக செயற்பாடுகளை முன்எடுத்து வருகிறார்கள். மட்டக்களப்பு மேற்கு கல்விவலயம்தை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான கல்விச்செயல்பாடுகளுக்கு முதல் கட்டமாக சில உதவிகளை வழங்குவதுடன் காலப்போக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களின் பாடசாலை மாணவர்களுக்கான வசதிகளை செய்வதும் உதயகுமார் கல்வி நிறுவனத்தின் நோக்கமாக உள்ளது.

கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம் கடந்த 2020, க.பொ.த சாதாரண பரீட்சையில் 10, மாணவர்கள் பரீட்சையில் தோற்றி அந்த பத்து மாணவர்களும் சித்தி பெற்று கிழக்கு மாகாணத்தில் நூறுவீத சித்திபெற்ற ஒரே ஒரு பாடசாலையாக திகழ்வது எமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.

இதற்கான காரணம் அதிபர்,ஆசிரியர்களின் அற்பணிப்பான செயல்பாடும் அதனூடாக பெற்றோர் பழைய மாணவர்களின் பூரண ஒத்துழைப்புமேயாகும்.

மட்டக்களப்பு மேற்கு வலய கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் அவர்கள் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள சுமார் 65,பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்காக கடமை உணர்வை தவிர்த்து சேவை மனப்பாங்குடன் அற்பணிப்பாக செயல்படுவதை பாராட்டவேண்டும் எனவும் கூறினார்.

இந்த நிகழ்வில் உதயகுமார் கல்வி'நிலைய செயலாளர் ம.ஜெயக்கொடி, மக்கள் நல ஒருங்கிணைப்பாளர் வே.அன்பழகன் உட்பட பலரும் உரையாற்றினார்கள்.மாணவர்களை கௌரவித்து கல்வி உபகரணங்களும் பரீசில்களும் வழங்கப்பட்டன.

## இணைந்த வடக்கு கிழக்கில் உயர்ந்தபட்ச சமஷ்டியே

கட்சிகளும் கலந்து கொள்ளக்கூடியதாக எமது அடுத்த சந்திப்பு அடுத்த இருவாரங்களுக்குள் நடாத்தப்படும் என ஏழு கட்சிகளின் தலைவர்கள் ஒருமித்த நிலையில் தீர்மானித்துள்ளனர்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக அது ஆரம்ப கட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட நிலையிலேயே நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இந்திய அரசாங்கத்தை ஒருமித்த நிலைப்பாட்டில் கோருவதற்கான கலந்துரையாடல் ஏழு கட்சியின் தலைவர்கள் ஆராய்வதற்காக செவ்வாய் கிழமை யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் ஒன்று கூடினர்.

இக்கூட்டத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம், சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டனி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டனி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி, தமிழ் தேசியக் கட்சி ஆகிய தலைவர்கள் இவ் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ் கூட்டத்தில் இவர்கள் ஒருமித்து எடுக்கப்பட்ட தீர்மானமாக தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்துவரும் அரசியல் தீர்வு என்பது அவர்களின் அரசியல் அபிலாசைக்களைத் திருப்;திப்படுத்தக்கூடிய முறையிலேயே அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தும் அதேவேளையில் எமது மக்கள் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சனைகளையும் கருத்தில் கொண்டு பின்வரும் தீர்மானங்களை, அவை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு நாம் முன்வைக்கின்றோம் என தெரிவித்த நிலையில் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

இந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் அமைந்திருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தினாலும் அரசாங்க ஆதரவுடனும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பல்லின. பல்மொழி, பல்மத மக்கள் வாழும் இந்த நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை முன்னெடுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி மக்களுக்கிடையில் ஒற்றுமை இன்மையையும் பிரிவினையையும் ஏற்படுத்தக்கூடிய பாரிய ஆபத்தைக் கொண்டிருப்பதால் அதனை திட்டவட்டமாக நாம் நிராகரிக்கின்றோம்.

எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளும் கலந்து கொள்ளக்கூடியதாக எமது அடுத்த சந்திப்பு அடுத்த இருவாரங்களுக்குள் நடாத்தப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகயீனம் காரணமாக விக்னேஸ்வரன் இக் கூட்டத்தில் பங்கு பற்ற முடியாத அவர் சார்பாக இந்த ஆவணம் பேராசிரியர் சிவநாதனால் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது.




## மரண அறிவித்தல்



அ.ரவிந்தீரன்

ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் மாமாங்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை விரிவுரையாளர் அ.ரவிந்தீரன் நேற்று தனது 64 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார். அன்னாரின் உடலம் அஞ்சலிக்காக மட்டக்களப்பு கோட்டைமுனை திருக்குறிப்புத் தொண்டர் வீதியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் இன்றுகாலை 10.00 மணிக்கு நடைபெற்று கள்ளியங்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

## மின் தடை இல்லை

அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக ஏனைய தொழிற்சங்கங்களும் நாளைய தினத்தில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளனர். இந்த நிலையில், நாளை மற்றும் நாளை மறுதினம் நாடளாவிய ரீதியில் மின்தடை ஏற்படலாம் என பரவலாக கூறப்பட்டு வந்த நிலையில் மின்சார சபை குறித்த அறிவிப்பினை விடுத்துள்ளது.

மேலும், இவ்வாறு மின்தடை ஏற்படலாம் என கருதி நாட்டின் பல பாகங்களில் உள்ள மக்கள் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களை நோக்கி படையெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாக்களித்த மக்கள் துன்பத்தில் இருப்பதை

மக்களின் பிரச்சினைகளை எதிர்கொள்ளக் கூடிய அரசியலை பொதுஜன பெரமுன முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்கட்டான சூழ்நிலைகளில் ஒரே நோக்கத்துடன் போராடிய கட்சிகள் பெரிதாயினும், சிறிதாயினும் அவற்றை பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிக்க முடியாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுவரில் ஓவியங்கள் வரைந்த இளைஞர்கள் இன்று நாட்டை விட்டு வெளியேறுவதற்காக கடவுச்சீட்டு பெறுவதற்கான வரிசையில் நிற்பார்களாயின், அவர்களை கண்டறிந்து மீண்டும் இந்நாட்டுக்கு அழைத்துவரும் வகையிலான அரசியலில் ஈடுபடுங்கள் என பொதுஜன பெரமுனவிடம் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தம்மை சிறையில் அடைத்தாலும் மக்களை குழப்பி, போராட்டங்களை செயற்படுத்தி மக்களை இருளில் மூழ்க வைக்க தாம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம்களை இணைத்துக்கொள்ள முடியுமாயின், அதுவே பொதுஜன பெரமுனவினால் செய்யக்கூடிய சிறந்த செயல் என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## தமிழ்- முஸ்லீம் தரப்புகள் ஒன்றிணைந்து

செவ்வாய்க்கிழமை தமிழ் பேசும் கட்சிகளின் கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய சந்திப்பு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் என்னிடமும் மனோ கணேசனிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த சந்திப்பை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழரசுக் கட்சி இந்த கலந்துரையாடலில் பங்கேற்காமை தொடர்பாக ஊடகங்கள் கேள்வியெழுப்பிய போது,குறித்த கலந்துரையாடல் தொடர்பாக ஏற்கனவே தமிழரசு கட்சியுடனும் ஏனைய கட்சிகளுடன் நடந்திருக்கின்றது.

அடையாள ரீதியாக நாம் இன்று சந்தித்தாலும் எதிர்வரும் காலங்களில் நாங்கள் சந்தித்து இதனை முன்கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளோம்

தமிழ்தரப்புக்களும் முஸ்லீம் தரப்புகளும் தேர்தல் உட்பட அனைத்து நடவடிக்கையிலும் ஒன்றிணைந்து செயற்பட சாத்தியப்பாடுகள் இருக்கின்றது. அனைத்திலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் மிக வேகமாக உணரப்பட்டு இருக்கின்றது என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

## கல்லடி பாலத்திற்கு அருகில் காணி அபகரிப்பில்

அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பிரதேச கிராம சேவையாளர் உட்பட கிராம மக்கள் அப்பகுதிக்கு வந்து குறித்த சம்பவத்தினை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்போது அங்குவந்த பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யப்படும் என பொதுமக்களிடம் தெரிவித்தார்.

சில காலங்களாக போலி உறுதிகளைக் கொண்டு குறித்த பகுதியை அபகரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொதுமக்கள் அதனை தடுத்து நிறுத்திவருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த வடிச்சல் பகுதி ஊடாகவே மழைகாலங்களில் நொச்சமுனை தொடக்கம் கல்லடி வரையான பகுதிகளில் உள்வரும் வெள்ளநீர் வடிந்து கல்லடி வாவியில் கலப்பதாகவும் குறித்த பகுதியை அடைத்தால் குறித்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியை பாதுகாப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் உரிய அதிகாரிகளும் விரைவாக நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் இதன் போது கோரிக்கை விடுத்தனர். குறித்த சம்பவம் காரணமாக கல்லடி பாலம் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டதுடன் போக்குவரத்து நெரிசல்களும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்போம்

இலங்கை தமிழர்களுக்கு ரூ.142.16 கோடியில் 3,510 குடியிருப்புகள் கட்டும் திட்டம் உள்பட ரூ. 225.86 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு , அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளையும் ஸ்டாலின் வழங்கியுள்ளார்.

அதேபோல், ரூ.142.16 கோடியில் 3,510 குடியிருப்புகள் கட்டுமான திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

நிகழ்வுக்கு வருகை தந்திருந்த தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இடம் பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்கான, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கியுள்ளார்.

இதன்போது பேசிய முதலமைச்சர், 'நீங்கள் அகதிகள் இல்லை, அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தமிழகத்தில் உள்ள 106 முகாம்களில் 19,046 குடியிருப்புகளில் மிகவும் பழுதடைந்த 7,469 குடியிருப்புகள் மீளவும் கட்டப்பட இருப்பதாக தமிழக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் கட்டமாக 290 சதுர அடி பரப்பளவுள்ள 3,510 புதிய வீடுகள் கட்டப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

1997 இல் முதல்வராக கருணாநிதி இருந்த போது இலங்கை தமிழர்களுக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தியதாக ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக நாம் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறியுள்ள தமிழக முதலமைச்சர், 1983 முதல் ஈழத்தில் இருந்து இங்கு வந்து கொண்டிருக்கிறீர்கள்.அவ்வாறு வந்தவர்கள் முகாம்களிலும் சிலர் வெளியிலும் தங்கியுள்ளதாகவும் தற்போது, தி.மு.க அரசு பொறுப்பேற்றதும் இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

# அட்டன் நகரில் வைத்து 6 கோடி ரூபா பணத்துடன் சினிமா பாணியில் வேனை கடத்திய சாரதி கைது





**(க.கிஷாந்தன்)**

அட்டன் நகரில் வைத்து 6 கோடி ரூபா பணத்துடன் சினிமாப் பாணியில் வேனைக் கடத்திய சாரதியை, விசேட அதிரடிப்படையினர் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

அட்டன் நகரிலுள்ள தனியார் வங்கியின் ஏ.டி.எம் இயந்திரத்தில் வைபிலிடுவதற்காக கண்டியிலிருந்து தனியார் நிறுவனம் ஒன்றினால் கொண்டுவரப்பட்ட பணமே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளது.

குறித்த தனியார் நிறுவனமொன்றின் அதிகாரி, பாதுகாப்பு அதிகாரி மற்றும் சாரதி ஆகியோர் ஏ.டி.எம் இயந்திரத்தில் பணத்தை வைப்பிலிடுவதற்காக நேற்று மதியம் வந்துள்ளனர்.

அதிகாரியும், பாதுகாப்பு ஊழியரும் வேனியில் இருந்து இறங்கியகையோடு, சாரதி வேனை செலுத்திக் கொண்டு பணத்துடன் தப்பிச்சென்றுள்ளார்.

நிறுவனத்தின் அதிகாரியும், பாதுகாப்பு ஊழியரும் அவரை பின்தொடர்ந்துள்ளனர். தலவாக்கலை லிந்துலை வழியாக அம்பேவல பகுதிக்கு வேன் செல்வதை, தொழில்நுட்ப உதவியுடன் கண்டறிந்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நுவரெலியா பதுளை பிரதான வீதியில் கெப்பட்டிபொல ரேந்தபொல பகுதியில் வைத்து நுவரெலியா விசேட அதிரடிப்படையினர் வேனை வழிமறித்து சாரதியை கைது செய்துள்ளனர்.

பின்னர் சாரதியையும், குறித்த பணத்தெகையையும், வேனையும் கெப்பட்டிப்பொல பொலிஸ் நிலையத்தில் வைத்து அட்டன் பொலிஸ் நிலையத்திற்கு கையளித்துள்ளனர்.

சந்தேக நபரையும், பணத்தொகையையும் அட்டன் பொலிஸாரால் இன்று (02.11.2021) அட்டன் நீதிமன்றத்தில், முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக நுவரெலியா விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# நுவரெலியா, இராகலையில் ஆசிரியர்கள் போராட்டத்தில்









**(க.கிஷாந்தன்)**

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு ஒரே தடவையில் தீர்வு வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா, வலப்பனை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்தே கொட்டும் மழைக்கு மத்தியில் ராகலை நகரில் குறித்த போராட்டத்தில் முன்னெடுத்திருந்தனர்.

இராகலை அஞ்சல் அலுவலகத்துக்கு முன்னால் போராட்டம் ஆரம்பமானதுடன், பதாதைகளை தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பிய வண்ணமும் இராகலை முருகன் கோவில் வரை போராட்டக்காரர்கள் ஊர்வலமாக சென்றனர்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு 24 ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் உள்ளது. அதற்கு உடனடி தீர்வு வேண்டும். இனியும் காலம் இழுத்தடிக்கப்படக்கூடாது என அதிபர், ஆசிரியர்கள் வலியுறுத்திக்கூறினர்.

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறப்பு: மக்கள் அவதானம்



**(க.கிஷாந்தன்)**

மத்திய மலைநாட்டில் பிற்பகல் வேளையில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று காலை ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் இன்று மதியம் மேலும் ஒரு வான்கதவு திறக்கப்பட்டன.

இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாக காட்சியளிக்கின்றது.

அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# சிங்கள குடியேற்றத்தை கண்டித்து வவுனியாவில் 10 ஆம் திகதி போராட்டம்

வவுனியாவில் இடம்பெறும் சிங்கள குடியேற்றத்தை கண்டித்து எதிர்வரும் 10 ஆம் திகதி நெடுங்கேணியில் அமைந்துள்ள வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்த தமிழ் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அனுராதபுரம் வடக்கின் சில கிராமங்களை எல்லை நிர்ணயம் என்ற போர்வையில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கான முனைப்பை அரசாங்கம் எடுத்துள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்பு பிரதிநிதிகள் இன்று வவுனியா வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் கலந்து கொண்டு குறித்த விடயம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பது என தீர்மானித்துள்ளனர்.

இதன் போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், எம். தியாகராசா, தமிழரசுக்கட்சியின் வவுனியா அமைப்பாளர் ந. கருணாநிதி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் சார்பில் ஜி. ரி. லிங்கநாதன், மாக்ஸிசலெனினிசகட்சி பிரமுகர் இ. பிரதீபன், ஜனநாயக போராளிகள் கட்சி உறுப்பினர், வவுனியா வடக்கு பிரதேசசபை தலைவர் எஸ். தணிகாசலம் என்போரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்திற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் பொது மக்களும் கலந்து கொண்டு சிங்கள குடியேற்றத்திற்கு எதிராக குரல் கொடுக்க முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கல்முனை பீச் பார்க் கட்டிடம் பயன்பாட்டுக்கு விட கோரும் பொது மக்கள்





**(எம். என். எம். அப்ராஸ்)**

அம்பாரை மாவட்டம் கல்முனை மாநகர பிரிவில் உள்ள மாநகர சபை பராமரிப்பில் காணப்படும் கல்முனை பீச்பார்க்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் முடிய நிலையில் இதுவரை எதுவித பயன்பாட்டின்றி காணப்படுதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை கடற்கரை வீதியில் உள்ள குறித்த பீச் பார்க்கில் அமைந்துள்ள புதிதாய் காணப்படும் கட்டிடம் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதுடன் இது வரை மக்கள் பாவனைக்கோ,இதுவரை பயன்பாட்டில் உள்ளதாக இல்லை என தெரியவருகிறது.

குறிப்பாக அந்த கட்டிடத்தின் கதவுகள் மற்றும் கண்ணாடிகள் , கூரை பகுதி உடைந்த நிலையில் உள்ளதுடன்கட்டிட உள் பகுதிகள் மிகவும் பாழடைந்த நிலையில் குப்பை கூளங்கள்

உள்ளதுடன் துர் நாற்றம் வீசும் நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது.அத்துடன் குறித்த வீச் பார்க்கில் அடிக்கடி கட்டாக்காலிகள் நடமாடுவதுடன் , மழை காலங்களில் வீச் பார்க் வளாகத்தில் மழை நீர் குளம் போல் தேங்கி நிற்பதை காண முடிகிறது

மேலும் குறித்த கட்டிட பகுதியில் கட்டாக்காலிகளின் தங்குமிடமாக உள்ளதை காணமுடிகின்றது.குறித்த வீச் பார்க்கில் அமைந்துள்ள

கட்டிடத்தினை விரைவில் பயன்பாட்டிற்க்கு விட வேண்டும் என பொது மக்கள் கோருகின்றனர்.இது தொடர்பில் கல்முனை மாநகர முதல்வர் ,ஆணையாளர்,கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் , உரியவர்கள் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மக்களின் வேண்டுகோளாய்உள்ளது.

# திருமலை வெள்ளைமணல் அல்.அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பவள விழா








**(திருமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை தி/வெள்ளைமணல் அல்.அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் %5து வருட பூர்த்தியை முன்னிட்டு பவள விழா நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எம்.அமீன் தலைமையில் நடைபெற்றது

இவ்வைபவம் கடந்த முதலாம் திகதி பாடசாலை பிரதான மண்டபத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி ஆரம்பமானது.

பாடசாலை அதிபர் ஏ.எம் அமீன் அவர்களின் வரவேட்ப்புடன் ஆரம்பமான இந்நிகழ்வு பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை பழைய மாணவர் சங்கம் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களினால் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வு நாளை ஞாபகப்படுத்தும் நிகழ்வாகவும் எதிர்காலத்தில் பவள விழாவினை வெகுவிமரிசையாக கொண்டாடுவதற்கான ஒரு ஒத்திகை நிகழ்வாகவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற ஆசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட மாணவர் தொகையுடன் குறிப்பிட்ட விருந்தினரை கொண்டு இந்நிகழ்வு ஏற்ப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பாடசாலையின் அதிபர் ஏ.எம்.அமீன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் பவள விழாவினை எதிர்காலத்தில் மிக சிறப்பாக நடாத்துவதற்கு அனைவரின் ஒத்துழைபிணையும் எதிர்பார்ப்பதாகவும் பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்

இன் நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும் பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் அவர்கள் விசேட அதிதியாக கலந்து கொண்டதுடன் பாடசாலையின் %5வது வருட பவள விழாவில் தனது வாழ்த்துக்களையும் இவ்வாறு தெரிவித்திருந்தார்

இப்பாடசாலையின் பழைய மாணவர் என்ற அடிப்படையிலும் என்னால் முடிந்த உதவிகளை இந்தப் பாடசாலை அபிவிருத்திக்கு வழங்கி வருகின்றேன். எதிர்காலத்திலும் நமது பாடசாலைக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்வதற்கும் தயாராக இருக்கின்றேன்.

இப் பாடசாலை 46 மாணவர்களுடன் 1946.11.01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று திருகோணமலை மாவட்டத்தில் பல துறைகளில் பல சாதனை மாணவர்களை உருவாக்கி உள்ளது.

கல்வி துறையில் மாத்திரம் அன்றி கலைத்துறை மற்றும் விளையாட்டுத் துறைகளிலும் பல சாதனை விருதுகளையும் பெற்றுள்ளது என்பதை இட்டு மகிழ்ச்சி அடைவதாகவும் இதன்போது தெரிவித்து கொண்டதுடன் மாணவர்கள் ஒழுக்கத்துடன் தங்களுடைய கல்வியறிவை வளர்த்து நமது சமூகத்துக்கும் நாட்டுக்கும் சேவைகள் செய்ய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இப்பாடசாலையின் இன் நிகழ்வினை ஏற்பாடு செய்த பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்,ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தனது நன்றியையும் பாராட்டுக்களையும் பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உப தவிசாளர் ஏ.எல்.எம் நௌபர் தெரிவித்துக்கொண்டதுடன்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு

இப் பாடசாலையின் முன்னாள் அதிபரும் கிண்ணியா அல் மினா மகா வித்தியாலயத்தின் அதிபருமாகிய எம்.வய்.எம் ஹதியத்துள்ளா அவர்கள் தமது உரையில் இப் பாடசாலையின் வரலாறு, பாடசாலை கட்டிடங்கள் அபிவிருத்தி, மற்றும் அவருடைய காலப்பகுதியில் கல்வி வளர்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் சம்பந்தமாக எடுத்துரைத்ததுடன் எதிர்காலத்தில் பல துறைகளில் சாதனை புரிவதற்கு மாணவர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் இப் பாடசாலை அதிபரும் கிண்ணியா அல் மினா மகா வித்தியாலயத்தின் அதிபருமாகிய எம்.வய்.எம் ஹதியத்துள்ளா, சின்னம் பிள்ளை சேனை அல்/ புர்க்கான் வித்தியாலய மதிப்புக்குரிய அதிபர், நாச்சிக்குடா அல் மதீனா வித்தியாலய அதிபர், கௌரவ பிரதேச சபை உறுப்பினர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் மற்றும் பழைய மாணவர் சங்க நிர்வாகிகள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# மன்னாரில் ஒக்டோபர் மாதம் 213 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் 31.10.2021 அன்று பதினைந்து கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இதனால் ஒக்டோபர் மாதம் மன்னாரில் கொரோனா தொற்றாளர்கள் 2%3 ஆக உயர்ந்துள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நாளாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மன்னார் மாவட்டத்தின் கொரோனா தொடர்பாக நாளாந்தம் வெளியிடும் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது

2021.10.31 ந் திகதி மன்னாரில் 15 கொரோனா தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மன்னார் பொது வைத்தியசாலை மற்றும் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் தலா 06 நபர்களும், அடம்பன் மாவட்ட வைத்தியசாலையில் 02 நபர்களும், விடத்தல்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவருமே இவ் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டதாக பதிவாகியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட 29393 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஒக்டோபர் மாதம் 431 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டத்தில் ஒக்டோபர் மாதம் முழுதும் 2%3 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும்

ஆரம்பம் முதல் ஒக்டோபர் மாதம் வரைக்கும் கொரோனா முதலாவது தடுப்பூசி 80835 பேருக்கும், இரண்டாவது தடுப்பூசி 73917 நபர்களுக்கும். குறிப்பிட்ட வயதுடைய மாணவர்களுக்கு 34%6 மாணவர்களுக்கும் பாடசாலை செல்லாத குறிப்பிட்ட வயதுடையோருக்கு 523 பேருக்கும் இவ் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தனது நாளாந்த அறிக்கையில் இவ்வாறு பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருகோணமலையில் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியரை நினைவேந்தும் நிகழ்வு.!

(அ . அச்சுதன்)





ஈழத்தின் மூத்த எழுத்தாளர் அமரர் நந்தினி சேவியரை நினைவு கூரும் நிகழ்வொன்று 30-10-2021 சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

அன்னாரது குடும்ப உறவுகள் நண்பர்களால் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு திருகோணமலை அலெக்ஸ் தோட்டம் தீபம் மண்டபத்தில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.



மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எழுத்தாளர்களும் இலக்கியவாதிகளும் கலந்து சிறப்புரையாற்றினர். நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் நினைவாக அவரது மகளால் மாங்கன்றுகள் வழங்கப்பட்டது.

# ஒரே நாடு ஒரே சட்டம் வர்த்தமானி வெளியீட்டில் தமிழ் தரப்பு புறக்கணிக்கப்பட்டமை ஏன்?

## கல்முனை மாநகரசபை உறுப்பினர் கேள்வி

(காரைதீவு நிருபர்)

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற போர்வையில் கௌரவ ஞானசார தேரரை தலைவராகக் கொண்ட வர்த்தமானியை அண்மையில் ஆளும் அரசு வெளியிட்டது. நான்கு முஸ்லிம் பெயர்தாங்கிகளைக் கொண்டு வர்த்தமானி வெளிவந்தது. ஆனால் தமிழர் பிரதிநிதி ஒருவர் கூட உள்வாங்கப்படவில்லை. இந்நிலையில் யுத்தக் குற்றங்களுக்கு இனி எவ்வாறு நீதி கிடைக்கும்?

இவ்வாறு கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஷிபான் பஹுறுத்தீன் கேள்வியெழுப்பியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்:

நாட்டின் பரப்புக்குள்ளே ஒன்பது குற்றங்களை செய்து ஜனாதிபதியின் பொது மன்னிப்பு பெற்ற ஒருவரை ' ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணிக்கு நியமித்தது தொடர்பில் மூவின மக்களும் பேரதிர்ச்சிக்கு உள்ளாகி இருப்பர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஞானசார தேரர் குற்றவாளியாக்கப்பட்ட குற்றங்கள்

வழக்கு இலக்கம் 6315%2000

1) வாகன அனுமதி பாத்திரம் இல்லாமல் பயணித்தமை.

2) சாரதி அனுமதி பாத்திரம் இன்றி பயணித்தமை.

3) மது போதையில் வாகனம் செலுத்தியமை.

4) விபத்தொன்றை தடுக்க முற்படாமை.

5) விபத்து பற்றி அதிகார துறையினருக்கு அறிவிக்காமை.

போன்ற 9 குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டதுடன் தாமும் அந்த குற்றங்களை ஒப்புக்கொண்டுமுள்ளார்.

அது மாத்திரமின்றி மூன்று வருடங்களுக்கு முன்னர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக்கப்பட்டு சிறைக்கு சென்று ஜனாதிபதி பொது மன்னிப்பில் உறுப்புரை 34(1) பிரகாரம் மன்னித்து விடுதலையானவராவார்.

யுத்தக் குற்றங்களுக்கு நீதி வேண்டும் என தமிழர் தரப்பு வேண்டுகோள்களை விடுத்துக்கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் பல குற்றச்சாட்டுகளுக்கு காரணமாக



இருந்து பொதுமன்னிப்பு பெற்ற ஒருவரை தலைவராக்கி ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோஷத்தை பேசு பொருளாக்கி இனரீதியாக ஆட்களை உள்வாங்கும் போது தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை வரலாற்று துரோகமாகும்.

மாத்திரமன்றி இவ்வாறான ஒருவரைத் தலைவராகக் கொண்டு அரசு சட்டம் உருவாகுமானால் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் நீதி வேண்டி நிற்கும் தமிழ் உறவுகளுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும் என்ற வினா தொக்கி நிற்கிறது.

ஆகவேதான் தமிழர் தரப்பு இதனை பயன்படுத்திக் கொள்வார்கள் என்று தோன்றுகிறது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களும் ஊடகங்கள் வாயிலாக தமிழர் தரப்பு உள்வாங்கப்படாமை தமக்கு நன்மையே என்ற கருத்தினை வலியுறுத்தியிருந்தார்.

தமிழர்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு இருப்பதானது ஆளும் அரசுக்கு தெரியாமலும் இல்லை. வேண்டுமென்றே தமிழர் தரப்பினை புறக்கணித்தது சர்வதேச ரீதியாக அழுத்தம் ஒன்றை தாமாகவே பெற்றுக்கொள்வதற்கான வழியை அரசே திறந்து கொடுத்துள்ளது.

டயஸ்போராக்களின் அழுத்தத்துக்கு முகம்கொடுத்து அரசு 2010ஆம் ஆண்டிலே வகுத்த தந்திரோபாயத்தை மீண்டுமொருமுறை வகுக்கின்றது. முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை மின்சாரக் கதிரையிலே அமர்த்தும் பேச்சை மீண்டும் கிளரி இலாபம் தேட முயற்சி செய்வதாகவே இதனை நோக்கவேண்டிக் கிடக்கின்றது.

2019 ஆம் ஆண்டில் முஸ்லிம் விரோத போக்கிலேயே அரசு 69 லட்சம் வாக்குகளை அரசு எடுத்திருந்தது.

பெரும்பான்மை சிங்கள மக்கள் முஸ்லிம்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை என்பது தெளிவாக புலப்பட்டு கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் மீண்டும் ஒருமுறை முஸ்லிம்களை நோக்கி வகுக்கும் தந்திரம் சிங்கள மக்களிடையே பலிக்காது என்பதினாலேயே தமிழர்களை நோக்கி அரசு திட்டம் வகுக்கிறது என்றே சொல்லத் தோன்றுகின்றது.

ஆகவேதான் இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களின் வாக்குகளினால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு கூட தகுதி இல்லாத ஒருவரைஇ சிறுபான்மை மக்களின் எதிரியாக சித்தரிக்கப்பட்ட ஒருவரினை வைத்து ஆளும் அரசு தனக்காக வாக்களித்த 69 லட்சம் மக்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்ற 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற மந்திரக்கோலை கையில் எடுத்துள்ளது.

# ச.தொ.ச. கிளை இல்லாத பிரதேசங்களிலுள்ள மக்கள் சீனியை சலுகை விலையில் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை!

காரைதீவு நிருபர்

நாட்டில் ச.தொ.ச. கிளை இல்லாத பிரதேசங்களிலுள்ள மக்கள் அரசாங்கம் அறிவித்துள்ள சீனியை சலுகைவிலையில் பெறமுடியாத துர்ப்பாக்கியநிலை நிலவுவதாக பொதுமக்கள் கவலைதெரிவிக்கின்றனர்.

நாட்டில் தற்போது ஒரு கிலோ சீனி 145 ரூபா தொடக்கம் 160 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர்இ விரைவில் சதொச ஊடாக பொதுமக்கள் தட்டுப்பாடின்றி சீனியைப் பெற்றுக்கொள்ள முடியுமென லங்கா சதொச தலைவர் ரியல் அத்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 80 கொள்கலன் சீனி விடுவிக்கப்பட்டதன் காரணமாகஇ எதிர்வரும் நாட்களில் ஒரு கிலோ சீனியை 122 ரூபாவுக்கு பொதுமக்களுக்கு வழங்க முடியுமென வும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், ச.தொ.ச தலைவர் கூறிய சலுகைவிலை சீனியை ச.தொ.ச.கிளை இல்லாத பிரதேச மக்கள் எவ்வாறு பெறுக்கொள்வவார்கள் என்பது கேள்வியாகும். அதாவது நாட்டுமக்களில் ஒரு சாராருக்கு அநீதி இழைக்கப்படுகிறது. அல்லது உரிமை மறுக்கப்படுகிறது.

கடந்தகாலங்களில் இயங்கிவந்த காரைதீவு ச.தொ.ச விற்பனைநிலையம் கடந்த வருடம் மூடப்பட்டதனால் இப்பிரதேச மக்கள் அரசு அறிவிக்கும் நிவாரண விலைகளில் பொருட்கள் எதனையும் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. அந்தப் பொருட்கள் வரிசையில் சீனியும் வந்துள்ளது.



அவர்கள் அவ்வாறு ச.தொ.ச. சீனியை கொள்வனவு செய்யவேண்டுமெனின் 5கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள கல்முனை ச.தொ.சவை நாடவேண்டும். அங்கு இப்படி சலுகைவிலை என்றால் நீண்டகியுவரிசை இருக்கும்.அந்தப்பிரதேச மக்களே முன்னுரிமை பெறுவர்.

கோவிட் பெருந்தொற்று காலப்பகுதியில் ச.தொ.ச. விற்பனை நிலையங்களின் சேவை மிகவும் அத்தியாவசியமானது.

ஏற்கனவே காரைதீவு ச.தொ.ச. கிளை மூடப்பட்டதால் மேற்குறிப்பிட்ட மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

எனவே ச.தொ.ச. காரைதீவுக் கிளையை மீண்டும் திறக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது காரைதீவு நிந்தவூர் பிரதேசங்களில் ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் இல்லையென்பதும் ,அவர்களால் இச்சீனியை பெறமுடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது..

# பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபரணங்கள்







காரைதீவு பிரதேச ஒரு தொகுதி பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபரணங்கள் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெனிதா மோகன் ஒருங்கிணைப்பின் கீழ் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி. எஸ். சிவமகேஸ்வரன், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வி. விஜயதாஸ், உளவள உதவியாளர் ரி. எம்.எம். ஹப்றத் ,முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவியாளர் அ.ஜெஸ்மின் , முகாமைத்துவ உதவியாளர் எஸ். சுசிகலா ,மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எம்.எஸ். றசீனா, பயிலுநர் பட்டதாரி ந.நிஜானந் போன்றோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அதன்போதான படங்கள் .

படங்கள் காரைதீவு நீருபர்

# நிந்தவூர் இஸட்.ரீ.எம்.ஆஷிக் தங்க பதக்கத்தை சுவீகரித்து இலங்கை மெய்வல்லுனர் குழாமில் இடம்பிடிப்பு

நூருல் ஹுதா உமர்

இலங்கை இராணுவத்தையும் கிழக்கு மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஆண்களுக்கான பரிதி வட்டம் வீசுதலில் கலந்து கொண்ட நிந்தவூர் மதினா விளையாட்டு கழகத்தின் சிரேஷ்ட வீரர் இஸட்.ரீ.எம்.ஆஷிக் 46.85 மீற்றர் தூரத்தை எறிந்து தங்க பதக்கத்தை சுவீகரித்து கொண்டார். இவ் வெற்றியின் மூலம் இலங்கை மெய்வல்லுனர் அவர் குழாமில் இடம்பிடித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டிற்கான 99 வது தேசிய



மெய்வல்லுனர் சம்பியனாக இலங்கை மெய்வலுனர் அணிக்கு பொதுநலவாய விளையாட்டு போட்டிக்கான வீரர்களைத் தெரிவு செய்யும் தகுதிகாண் தெரிவு கடந்த சனிக்கிழமை (30)ம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

கொவிட் - 19 அசாதாரண சூழ்நிலையில் இவ்வெற்றியை பெற பயிற்சிகளை மேற்கொள்ள இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மைதான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்த இலங்கை தென்கிழக்கு பல்கலை கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எச்.ஏ.சத்தார் ஆகியோர்களுக்கு விஷேடமான நன்றிகளை தெரிவிக்கும் மதீனா விளையாட்டு கழகத்தினர் தான் பிறந்த மண்ணுக்கும் தாய் நாட்டுக்கும் பெருமையை ஈட்டி கொடுத்த வீரர் இஸட்.ரீ.எம்.ஆஷிக்கிற்கு பாரட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு நிகழ்வு

(எம்.ஏ.றமீஸ்)

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான சௌபாக்யா தேசிய உணவு உற்பத்தியினை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டச் செய்கையினை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் தற்போது நாடு தழுவிய ரீதியில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு பயிற்சி வழங்கி பயிர் விதைகள் வழங்கி வைக்கும்



நிகழ்வு நேற்று அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலையத்தில் இடம்பெற்றது.

விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எச்.ஏ.முபாறக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸப்பிர், பண்மை முகாமையாளர் எம்.ஐ.சியாத் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் இந்நிகழ்வின்போது கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, ஆலம்குளம், தீகவாபி உள்ளிட்ட பிரதேசத்தில் உள்ள சுமார் நான்காயிரம் குடும்பத்தவர்கள் மத்தியில் வீட்டுத் தோட்டச் செய்கையினை மேம்படுத்தும் நோக்கில் இவ்வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள், வருமானம் குறைந்த குடும்பத்தவர்கள் மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கையில்



ஆர்வமுள்ள குடும்பத்தர்கள் போன்றோருக்கு மனைப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் வகையில், பயிர் விதைகளும், பயிர்ச் செய்கைக்கான ஆலோசனை வழிகாட்டல்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

மக்கள் வீடுகளில் இருந்தவாறு போஷாக்கான உணவு உற்பத்தியினை மேற்கொள்வதோடு, வாழ்க்கைச் செலவினைக் குறைத்து நச்சுப் பொருளற்ற சுற்றாடல் நேயம் மிக்க உற்பத்தியின் பால் மக்களை வழிப்படுத்தும் இச்செயற்றிட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுமாறு துறைசார் உயரதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

இதன்போது குறித்த பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிக்கும் விஷேட செயன்முறைக் கருத்தரங்கொன்று இடம்பெற்றதுடன், வீட்டுத் தோட்ட உரிமையாளர்கள் இப்பயிர்ச் செய்கையின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்தும் அதிகாரிகளால் கேட்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# இணைய வழிக்கல்வி
# தற்கால கல்விச் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்

தற்காலத்தில் கொரோனா (கொவிட் 19) ஊரடங்கினால் உலகம் முழுவதும் உள்ள பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்ட சூழலில் இணையம் வழியாக கல்வி கற்கவேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் கல்வியை குருகுலம் மூலமும் பின்னர் திண்ணைப் பள்ளிகள் மூலமும் போதித்து வந்தும் சங்க சங்கமருவிய காலங்களில் கல்வியை போதிப்பதில் தமிழ்ச் சங்கங்கள் பெரும் பங்கு வகித்தன. ஆங்கிலேயரின் ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கியதும் பள்ளிக்கூடங்கள் கல்வி போதிக்கும் இடங்களாக மாறின. பின்னர் நாளடைவில் கல்வி அனைவருக்கும் பொதுவாகி நாடு முழுவதும் பாடத்திட்டங்களுடன் ஒரு முறையான கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. காலத்தின் தேவைக்கேற்ப கல்வித்துறை பல மாற்றங்களை அடைந்தே வளர்ந்து வருகின்றது.

இந்த வகையில் கற்றல் கற்பித்தல் எனும் நேரடி வகுப்பறை நிகழ்வில் ஆசிரியரும் மாணவரும் இணைந்து செயற்படுவது மாறி இணையவழியில் கற்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் தகவல் தொழில் நுட்பத்திறன் விருத்தி காண்பது கண்கூடு. தகவல் தொழில் நுட்பப் பெருவளர்ச்சியில் உலகமே ஒரு சிறிய கைப்பேசிக்குள் அடங்கி விட்டது என்பதும் உண்மை தான்.

இந்த உலகை உலுக்கும் கொடிய நோயினால் மக்கள் வாழ்விலும், பொருளாதாரத்திலும் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலையில் மாணவர்களின் எதிர்காலக் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு மாணவர்களுக்கு இணையவழிக் கல்விமுறை இன்றைய சூழலில் பெரிதும் தேவையாகிறது. இவ்வாறான இணைய வழிக் கல்வி முறைக்காக மாணவர்களுக்கு அறிதிறன்பேசி , மடி கணனி ,கணனி போன்ற தொழில் நுட்பக் கருவிகள் மாணவர்களின் கல்விக்காக கட்டாய தேவையாக்கப்பட்டுள்ளது. இந்த தேவைகளை பூர்த்தி செய்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு கொள்வதற்கு அனைத்து மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் புதிய சவால்களாகவே உள்ளது. மேலே நான் குறிப்பிட்ட பொருளாதாரப் பிரச்சனை, குடும்ப சூழல் போன்றவற்றினால் பின்தங்கிய மாணவர்களின் நிலை கல்வியிலே கவலைக்கிடமாகவே உள்ளது.

குறிப்பாக அறிதிறன் பேசி எல்லா மாணவர்களிடமும் இருக்காத குடும்ப சூழ்நிலையில் மாணவர்கள் பலர் மன அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு ஆளாகி கல்வியில் பின்தங்கியவர்களாக உருவாக்கப்பட்டு வருகின்றனர். ஒரு வேளையில் அறிதிறன் பேசி வசதியுடைய மாணவர்களுக்கு இணைய இணைப்பு எல்லா நேரங்களிலும் கிடைக்கப்பெறாத சூழ்நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் கிராமப்புறத்தில் வசிக்கும் மாணவர்களில் அதிகம் காணக்கூடியது கண்கூடு.

அனைத்து கல்வித் திணைக்களங்கள் பாடசாலை நிர்வாகத்தினூடாக இணையம் வசதி அற்ற மாணவர்களுக்கு ளடிஅ வசதியினையும் தொலைக்கல்வி முறையினையும் கற்றலுக்காக ஏற்பாடு செய்துள்ளது. இருந்தும் இவை இரண்டினூடாகவும் இணையவழியில் கற்கமுடியாத சூழ்நிலையில் மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கான முக்கிய காரணம் குடும்ப பொருளாதாரப் பிரச்சனையினால் மாணவர்கள் தொழிலாளியாகின்றனர். இதனாலும் மாணவர்களும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் மன உளச்சல்களுக்கும், மன அழுத்தங்களுக்கும் ஆளாகின்றனர்.

மேலும் இணையவழியில் கற்கும் மாணவர்கள் தங்களின் கற்றல் செயற்பாடுகளின் போது தொழில் நுட்பக் கோளாறுகளால் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இச்சூழ்நிலை ஆசிரியர்களுக்கும் சிக்கலான சூழ்நிலையாகவே காணப்படுகின்றது. உதாரணமாக வகுப்பறைக் கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர்கள் வகுப்பறையில் உள்ள மாணவர்கள் அனைவரையும் நேரடி மதிப்பீடு செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுகின்றது. ஆனால் இணைய வழிக் கற்றலினுடாக மாணவர்களின் பூரணமான நிலையை அறிய முடியாத சூழ்நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர். இவற்றை விட பயிற்சி கொப்பிகளையும் மதிப்பீடு செய்வதில் பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

மாணவர்கள் தங்களின் கற்றல் செயற்பாடுகளின் போது தமது சந்தேகங்களை இணைய வழி கற்றலினூடாக தீர்த்துக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. சந்தேங்கள் ஏற்படுகின்ற மாணவர்களினுடைய தீர்வுகளை முழுமையாக ஒரு ஆசிரியரினால் குறிப்பிட்ட நேரத்தில் தீர்த்துக் கொள்ள முடியாத சூழ்நிலை இணைய வழிக்கற்றலில் ஏற்படுகின்றது. இதனாலும் மாணவர்களுக்கு மன அழுத்தங்கள் ஏற்படுகின்றது. ஆசிரியர்கள் பாராபட்சம் பார்க்கின்றனர் என்ற ஒரு தப்பான எண்ணங்கள் மாணவர்களின் மனதில் ஏற்படுகின்ற வாய்ப்பும் இதனூடாக உருவாக்கப்படுகின்றது. மேலும் இணைய வழியில் கற்பிக்கப்படும் நீண்ட நேர வகுப்புகளால் கைபேசி, மடிகணணி முதலான கருவிகள் வெப்பத்தால் பலவீனமடையும் சூழல் உருவாகின்றது. இதுபோன்று மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தலைவலி, கண் பாதிப்பு, மனஅழுத்தம் முதலான உடலியற் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ணுழழஅ கற்றலினூடாக கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் போது இடையிடையே இணையம் இடைநிறுத்தப்படுவதனால் கற்றலில் கவனச் சிதறல் ஏற்படும் நிலையும் உள்ளது.

உலக நாடுகளில் இன்று கல்வி முறையானது இணையவழியினூடாக நடைமுறையில் இருந்தாலும், மேலைத்தேய நாடுகளிலேயே வெற்றிகண்டுள்ளது. எமது நாடான இலங்கையைப் பொறுத்தவரையில் இக்கல்வி முறை பாரிய சவாலாகவே பார்க்கப்படுகின்றது. இதுவரை காலமும் இலங்கை மாணவர்கள் இக்கல்வி முறை தொடர்பான அறிவையோ, தேவைப்பாட்டையோ கொண்டிருக்கவில்லை. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இணையக்கல்வி தேவைப்பாடு கட்டாயமாக தேவைப்படாத ஒன்றாகவே இருந்தது. திடீரென அறிமுகம் செய்யப்பட்ட இக்கல்வி முறையால் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்வது, கலந்து கொள்வது தொழில் நுட்பசாதனங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் இன்றுவரை மாணவர்கள் மத்தியில் சிக்கல்களும் சவால்களுமாகவே இருந்து வருகின்றது. மாகாணங்கள், மாவட்டங்கள் என்ற ரீதியில் இணைய வழிக்கல்வியானது மன அழுத்தங்களுடன் கூடிய சவால்களாகவே உள்ளது. குறிப்பாக ஊவா மாகாணத்தினை எடுத்துக் கொண்டால் மாணவர்கள் இணையமூடாக கல்வியினைப் பெறுவதற்கு கொடிய விலங்குகள் நடமாடும் ஆபத்தான இடங்களிலேயே தமது கற்றலினை மேற்கொள்ளுகின்றனர். இதே சூழ்நிலையிலேயே ஆசிரியர்களும் தள்ளப்படுகின்றனர். ஏன் கிழக்கு மாகாணத்தினை எடுத்துக் கொண்டால் 30 சதவீதமான மாணவர்கள் மட்டுமே ?ஒன்லைன்? வகுப்புக்களில் கலந்து கொள்கின்றமையும் பின்தங்கிய கஷ்ட அதிஷ்ட பிரதேச பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்ற மாணவர்களுக்கு இணையவழிக் கல்விமுறையால் கல்வி நிலையானது இன்று கேள்விக் குறியாகியுள்ளதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து இலங்கையிலுள்ள ஆசிரியர்கள் அனைவரும் கல்விக்காக இணையத்தினூடாக மாணவர்களுடன் தொடர்பு கொள்ள முனைகின்றனர். ஆனால் மாணவர்களின் சதவீதமானது 45 ஆகவே காணப்படுகின்றது. இவ்விடயம் இலங்கை கல்வி மன்றத்தால் நடாத்தப்பட்ட மதிப்பாய்வாகும். இந்த வகையிலே ஆசிரியர்கள் மாணவர்களின் தேர்ச்சி அடைவு மட்டங்களுக்காக போராட வேண்டிய நிற்பந்தமும், தேவையும் ஏற்படுகின்ற போது மன உளச்சல்களுக்கு ஆளாகின்றனர்.



ஆக்கம்:
தர்மபாலன் கீதாஞ்சலி

பல்கலைக்கழக, உயர்கல்வியினை மேற்கொள்ளும் பல மாணவர்களை பொறுத்தவரையில் இணையக் கல்வியானது பயன்பாடற்ற கல்வியாகவே நோக்கப்படுகின்றது. இங்கு ணுழழஅ இன் ஊடாக கற்பித்தலினை மேற்கொள்ளும் ஒரு விரிவுரையாளர் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றமை கண்கூடு. விரிவுரைகள் நடாத்தப்படும் போது குறிப்பிடத்தக்க சில மாணவர்கள் தங்களின் சொந்த தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு விரிவுரைகளை பதிவுகளில் இட்டுவிட்டு சுயதேவைகளை விரிவுரை நேரத்திலேயே செய்வதற்கு முற்படுகின்றனர். இதனால் குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும் விரிவுரை முறைகள் அவதானிக்கப்படாமல் இருப்பதும் இது பற்றிய விடயங்களை மீளவலியுறுத்தும் சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு இவ்விடயங்கள் புது விடயமாகவே காணப்படுகின்றதை அவதானிக்கக்கூடிய ஒன்றாகும். இதனால் பல தேடல்களுக்கு மத்தியில் மொடியூல்ஸ் தயாரிக்கப்பட்டு நடாத்தப்படும் விரிவுரைகளுக்கு பொறுப்பானவர்கள் பல பல மனஅழுத்தங்களை நேரிடவேண்டிய தேவையாகவுள்ளது.

இது மட்டுமன்றி உயர் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் கணனி, அறிதிறன்பேசி இல்லாத மாணவர்கள் அருகிலுள்ள சகநண்பர்களின் வீடுகளுக்கோ, கணணி நிலையங்களுக்கோ சென்று தமது வகுப்புக்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களுக்கும் உருவாகின்றது. இதனால்; மாணவர்கள் தமது வீட்டை விட்டு வெளியில் சென்றவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வீடு திரும்பாத நிலையில் பெற்றோர்கள் மன உளச்சல்களுக்கு ஆளாகின்றனர். இதுபோன்ற பல சம்பங்கள் நாடு பூராகவும் நடைபெற்று வருகின்றமை பல செய்திகளினூடாக அறிய முடிகின்றது.

பொதுவாக பாடரீதியாக பார்ப்போமானால் செய்முறை கலந்த பாடவிதானத்தில் மாணவர்கள் முழுமையான அடைவுமட்டங்களை அடைய முடியாதுள்ளது. உதாரணமாக பரதநாட்டியம் என்ற பாடத்தினை எடுத்துக் கொண்டால் இங்கு செய்முறைப் பரீட்சை என்பது க.பொ.த சாதாரண, உயர்தர மாணவர்களுக்கு கட்டாயமானதாகும். இந்த செய்முறை விளக்கங்கள் பரதத்தினைப் பொறுத்த வரையில் குருவிற்கு அருகாமையில் இருந்து கற்பதே சிறந்த முறையாகும். பண்டைய காலத்தில் குருகுலக்கல்வி முறை குருசிஷ்ய தொடர்பு போன்ற விடயங்கள் முதன்மையான விடயமாகும். பரதத்தினைப் பொறுத்தவரையில் இன்றும் பண்டைய பழமை பேணப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும். பாடலினைப் பாடிக்கொண்டே குருவானவர் அபிநயத்துடனும், பாவத்துடனும் வெளிக்காட்டப்படும் உருப்படிகளை மாணவர்கள் இவ்வாறான இணையவழி கற்றலின் மூலம் தெளிவு பெறுவது சிரமமாகவுள்ளது. பாடலுக்கு பொருத்தமான முத்திரைப் பிரயோகங்களை பெற்றுக்கொள்வதற்கு தெளிவற்ற நிலை ஏற்படுகின்றது. மேலும் அடவுகளிலிருந்து உருப்படிகள் வரை கற்பிக்கும் போது வகுப்பறைக் கற்பித்தலை விட இணையவழியில் காலங்கள் அதிகமாக தேவைப்படுகின்றது. மாணவர் குருவினூடாக பயிற்சி பெற்ற விடயங்களை செய்முறையாக செயற்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றது. செய்முறை வகுப்புக்களின் போது வீடுகளிலிருந்து கற்றலினை மேற்கொள்ளும் சில மாணவர்களுக்கு தங்களின் குடும்ப அங்கத்தவர்களின் மத்தியில் கூச்ச சுபாவம், தாழ்வு மனப்பான்மை போன்ற விடயங்களினால் சரியான முறையில் வகுப்புக்களில் ஈடுபட முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இதனால் மன அழுத்தங்களுக்கு மாணவர்கள் ஆளாக்கப்படுகின்றனர். அழகியல் உளவியலோடு தொடர்புடைய ஒரு பிரிவாகும். இந்தவகையில் அனுபவம் அவதானம் இரண்டும் அழகியலுடன் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுள்ளது.

'முண்டகோ' உபநிடதத்தில் ஒரே மனத்தின் இரு பண்புகள் விளக்கப்படுகின்றன. ஒரு மனம் அனுபவிக்கும் மனமாகவும் மற்றயது அனுபவத்தில் நின்றும் விலகி அவதானிக்கும் மனமாகவும் காணப்படுகின்றது. அழகியலைப் பொறுத்தவரையில் இந்த இரு தொழிற்பாடுகளும் இன்றியமையாத கூறுகளாகும். அதிலும் நடனத்திற்கு இவ்விரண்டும் முழுமையான விடயமாகும். அழகை அனுபவிக்கும் மனமும், அதனைப் புறம் நின்று பார்க்கும் மனமும் அழகுக் கட்டுமானத்துக்கு முழுமை வழங்குகின்றது. ஐம்புலன்களையும் மனம் இணைப்பதுடன் ஆத்மாவுடன் இணைப்பை ஏற்படுத்துகின்றது. எனவே நாட்டியத்தினுடைய அழகை முழுமையாக பெற்றுக்கொள்ளும் இடம் குருவின் அருகாமையாகும்.

எனவே இணையவழிக் கற்றலில் மூலம் செய்முறையின் முழுமையான பூரணத்துவத்தினை அடைவது இலகுவான விடயமல்ல என்பது எனது அனுபவ ரீதியான உண்மையாகும். ஒவ்வொரு மாணவனும் தகுதியுள்ளவனே அவனுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் ஆர்வமான துறையில் அவனை தகுதியுடையவனாக வெளிக்கொணர்வதே ஆசிரியரின் சவாலாகும். இந்த விடயங்களை ஒருபோதும் இணையவழிக் கல்வியினூடாக செயற்படுத்த முடியாத மன அழுத்தம் ஆசிரியர்கள் மத்தியில் இன்றைய காலகட்டத்தில் பெரும் போராட்டமாகவுள்ளது. இது மட்டுமின்றி நிகழ்நிலைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு வருகின்ற போது இதில் மாணவர்களின் தகுதியை மட்டிட முடியாதவர்களாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் உள்ளனர்.

சில சமயங்களில் 'ஒன்லைன்' பரீட்சை நடைபெற்று புள்ளிகள் வழங்கப்பட்டிருக்கும். ஆனால் புள்ளிகளிலே மாணவர்களுக்கு பல சந்தேகங்கள் ஏற்படுகின்றது. குறிப்பிட்ட வினாக்களை விட அதிகமான புள்ளி வீதம் பதிவாக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இங்கு விடைகளுக்குரிய தெளிவின்மையும் ஏற்படுகின்றது. இவ்வாறான விடயங்கள் மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் மன அழுத்தங்களை ஏற்படுத்துகின்றது. இது போன்ற விடயங்கள் வகுப்பறைக் கற்பித்தலின் போது ஏற்படுமிடத்தில் அதனை உரிய நேரத்தில் சரிசெய்து மாணவர்களின் மன அழுத்தங்களை குறைப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். இவ்வாறான பல விடயங்கள் மாணவர்கள் மத்தியிலும் ஆசிரியர் மத்தியிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது ஏற்படும் மன அழுத்தங்களை குறைப்பதற்கு மாற்றமடையப் போகும் கலைத்திட்ட சீர்திருத்தங்களினால் (2023) ஓரளவேனும் சீர்செய்வதற்கு அரசு முயற்சி செய்து வருகின்றது. இவ்வாறான கலைத்திட்ட சீர்திருத்தங்களினால் தொழிற்கல்வியை நோக்கிய கல்வியாகவே இலங்கையின் கல்வி அமைந்துவிடும் என்பது எதிர்பார்;ப்பாகும்.

கல்வி வளமே நாட்டின் மிகச்சிறந்த மனித வளமாகும். இன்றைய சூழலில் இணைய வழிக்கல்வி மிகமிகத் தேவையாகின்றது. ஆதலால் இணைய வழிக் கல்வியை நேரடி வகுப்பறைக் கல்விக்கு இணையாகக் கொள்ள முடியாது. இது தற்காலிக தீர்வாகக் கொள்ளலாம். எனவே அனைத்து மாணவர்களுக்கும் இணைய வழிக் கல்வி கிடைத்திட வழிவகைகள் செய்ய வேண்டும். அதுவே கல்வித் துறைக்கும் நாம் தற்போது ஆற்றிக் கொண்டிருக்கும் கடமைக்கும் தேவையாகும்.

தொகுப்பு எஸ்.அஷ்ரப்கான்

நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA TWINT




# இழந்த கல்வியை ஈடுசெய்யும் 100 நாள் கல்வி வேலைத்திட்டம் தொடர்பாக ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)





கொவிட் - 19 வைரஸ் தாக்கம் காரணமாக இழந்த கல்வியை ஈடுசெய்யும் 100 நாள் கல்வி வேலைத்திட்டம் தொடர்பாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் கல்முனை கல்விவலய நிர்வாகத்தின் கீழுள்ள சாய்ந்தமருது கமு / லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சம்சுதீனின் தலைமையில் நடைபெற்ற இந்த வேலைத்திட்டத்தின் பிரதான வளவாளராக கல்முனை வலய கல்வி பணிமனையின் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹறூன் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு விளக்கமளித்தார். இந்நிகழ்வில் பாடசாலையின் உதவி அதிபர் யு.எல்.எம். நிஸார் உட்பட ஆரம்பக்கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மாவட்ட விளையாட்டு போட்டிகள் ஆரம்பம்

(எம்.ஐ.எம்.றியாஸ்)

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் 33ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டியினை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் பிரதேச செயலகப் பிரிவுகளில் வெற்றி பெற்ற இளைஞர் கழகங்களுக்கிடையிலான அம்பாறை மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நேர அட்டவணையை நேற்று அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாறக் அலி அறிவித்தார்.

இதற்கமைவாக, நாளை வியாழக்கிழமை (04.11.2021) கபடி போட்டி திருக்கோவில் குட்னிக் விளையாட்டு மைதானத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை (05.11.2021) அம்பாறை பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8.0 0 மணி முதல் நெற்போல், வொலிப்போல் உட்பட அன்றைய தினம் மாலை 2.00 மணிக்கு கையிறுழுத்தல் போட்டியும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை (08.11.2021) காலை 8.00 மணி முதல் மருதமுனை மசூர் மௌலான பொது விளையாட்டு மைதானத்தில் உதைப்பந்தாட்டமும், எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை ( 11 .11 .2021) இறக்காமம் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8.00 மணி முதல் கிரிக்கெட் போட்டியும், எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை (13.11.2021) அம்பாறை பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8.00 மணி முதல் எல்லே போட்டியும் நடைபெறவுள்ளது.

கொரோனா 19 தொற்று காரணமாக நடை பெறாமல் தற்போது தாமதமாகி நடைபெறும் இப்போட்டிகளில் இளைஞர் கழகங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் உங்களது வீரர்களை நேர காலத்தோடு மைதானங்களுக்கு அனுப்பி வைப்பதுடன் கொவிட் 19 தொடர்பான சுற்று நிருபங்களை கடைப்பிடித்து நடப்பதற்கு ஆலோசனைகள் வழங்குமாறும் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாறக் அலி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு





(அ . அச்சுதன்)

திருகோணமலையில் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கானது முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் அனுசரணையுடனும் மற்றும் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் அவர்களது தலைமையிலும் நேற்று காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையும் தி/ குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்திலும், நண்பகல் 1.00 மணி முதல் மாலை 4.30 மணி வரையும் தி/ ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றது.

சாதகமான கற்றல் சூழலை உருவாக்குவதன் மூலம் மாணவர்களைப் பொதுப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் குறித்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநராக சட்டத்தரணி சேகு இஸ்ஸதீனை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாணத்திற்கு ஆளுநராக முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க ஜனாதிபதி எடுத்த முடிவை முஸ்லிம் சமூகம் வாஞ்சையோடு வரவேற்கிறது. இப்பதவிக்கு முன்னாள் அமைச்சரும் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முதலாவது எதிர்க்கட்சி தலைவருமான வேதாந்தி சட்டத்தரணி எம்.எச். சேகு இஸ்ஸதீனை நியமிக்குமாறு நட்பிட்டிமுனை பளீல் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பின் தலைவரும் முன்னாள் கல்முனை பிரதேச சபையின் உறுப்பினருமான தேசகீர்த்தி அப்துல் கபூர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.



அந்தக் கடிதத்தில் அப்துல் கபூர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்து வரும் மூவின மக்களின் அன்புக்குப் பாத்திரமானவராக முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் உள்ளார். இனவாதம், மதவாதம், பிரதேசவாதமற்ற மூத்த அரசியல்வாதியும் ஆவார். மறைந்த தலைவர் அஷ்ரப்புடன் அரசியலில் ஒன்றாக பயணித்து முஸ்லீம் சமூகத்துக்கு ஒரு தனித்துவ அரசியல் கட்சி தேவை என முஸ்லிம் சமூகத்தை விழிப்படையச் செய்தார். அதில் வெற்றியும் கண்டார்.

முஸ்லிம், தமிழ் ஆகிய சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்டில் சில விட்டுக்கொடுப்புகளுடன் ஒருமித்து பயணிக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வருபவர். வடகிழக்கு இணைந்த மாகாணத்தின் முதலாவது மாகாண சபையின் முதலாவது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த காலத்தில் தமிழ் தலைவர்களுடனும் தமிழ் மக்களுடனும் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து வந்தவர். இவர் கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் ஆவார். என்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அப்துல் கபூர் தெரிவித்துள்ளார்.

# நெசவு ஆடை உற்பத்தி விற்பனை





(திருக்கோவில் நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தும் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தினால் உள்ளூர் நெசவு ஆடை உற்பத்திகளை அரச உத்தியோகத்தர்களுக்கு அறிமுகப்படுத்தலும் விற்பனைகளும் திருக்கோவிலில் இன்று இடம்பெற்று இருந்தன.


இவ் உள்ளூர் நெசவு ஆடை உற்பத்திகளின் விற்பனை சந்தையானது திருக்கோவில் பிரதேச செயலாளரின் ஆலோசனைக்கு அமைவாக அம்பாரை மாவட்ட கிராமிய தொழிற்துறை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.கனேந்திரனின் ஒழுங்கமைப்பில் திருக்கோவில் பிரதேச செயலக வளாகத்தில் இன்று திங்கட்கிழமை இடம்பெற்று இருந்தன.


அந்தவகையில் உள்ளூர் செநவு ஆடை உற்பத்திகளை அரச உத்தியோகத்தர்கள் ஊடாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் நோக்குடன் கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் கீழ் அம்பாரை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் 25 நெசவு நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட நெசவு ஆடைகளே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு இருந்தன.

இவ் உள்ளூர் நெசவு ஆடை உற்பத்தி விறபனையினை திருக்கோவில் பிரதேச செயலாளர் ஆரம்பித்து வைத்திருந்ததுடன் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா கிராம சேவையாளர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் கண.இராஜரெத்தினம் கிராமிய தொழிற்துறை திணைக்கள உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு உள்ளூர் நெசவு ஆடைகளை பெருமளவில் கொள்வனவு செய்து இருந்தனர்.

# சௌபாக்கியா வார வீட்டுத்தோட்ட வேலைத்திட்டம்

(வி.சுகிர்தகுமார்)





ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான சௌபாக்கியா வார வீட்டுத்தோட்ட வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

'நிலையான வீட்டுத்தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் 2021' எனும் கருப்பொருளுக்கமைய இம்மாதம் 01 ஆம் திகதி முதல் 0% ஆம் திகதி வரையான காலப்பகுதி சௌபாக்கியா வீட்டுத்தோட்ட வாரமாகவும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இன்று அக்கரைப்பற்று கிழக்கு விவசாய விரிவாக்கல் காரியாலயத்தினால் வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கான விதைப்பொதிகள் கிராமங்களுக்கு சென்று இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று கிழக்கு விவசாய விரிவாக்கல் நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.எஸ்.எம்.நிப்றாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விவசாய விரிவாக்கல் காரியாலயத்தின் உத்தியோகத்தர்களான ரிஏ.பிரியதர்சினி, எம்.ஏ.சில்மியா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வீட்டுத்தோட்ட செய்கை சம்மந்தமான பயிற்சிகளும் நஞ்சற்ற விவசாயம் சம்மந்தமான தெளிவுகளும் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்டது.

# கொழும்பு டோக்யாட் கிளை அலுவலகம் திருமலை துறை முக வளாகத்தில் திறந்து வைப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)





கொழும்பு டொக்யாட் கிளை அலுவலகம் திருகோணமலையில் உள்ள வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக துறை முகங்கள் கப்பற் துறை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர அவர்கள் கலந்து கொண்டு திறந்து வைத்தார். உற்பத்தி துறையின் ஏற்றுமதி இறக்குமதி ஊடாக மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இவ் கிளை அலுவலகம் திருகோணமலை துறை முக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் டொக்யாட் நிறுவனத்தின் தலைவர் டானக மற்றும் இலங்கை துறை முக அதிகார சபையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# இரத்ததானம் நிகழ்வு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மலையக உரிமை மீட்பு பயணம் அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலியா சீத்தா எலிய 'எஸ்போர்ட்' சுற்றுலா ஹோட்டலில் இரத்ததான நிகழ்வொன்று நடைப்பெற்றது. இந்நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம், மலையக உரிமை மீட்பு பயணம் அமைப்பின் உறுப்பினர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொது மக்களும் கலந்துக்கொண்டனர்.

# பாலர் பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கல்

(மாளிகைக்காடு நிருபர்)



இறக்காமம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த முன்பள்ளிப் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாடின் ஏற்பாட்டில் செவ்வாய் கிழமை இமாம் இப்னு ஹஜர் பாலர் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு சது/இற/ அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் அதிபர் ஏ.ஹாறுடீன், பாடசாலை ஆரம்ப பிரிவு பொறுப்பாசியை பரீனா ஹாறுான், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். சபறுல் ஹஷீனா, பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் எஸ். றிஸ்மியா ஜஹான் ஆகியோர் கலந்து கொண்டதோடு கொரோனாவிற்கு பின்னரான மாணவர்களின் உள ஆரோக்கியத்தை கட்டியெழுப்புவதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் வகிபாகம் தொடர்பில் ஆலோசனையும் வழிகாட்டல்களையும் வழங்கிவைத்தனர்.

பிந்தங்கிய கிராமங்களில் உள்ள மாணவர்களின் முன்பள்ளி பாடசாலைக் கல்வியை உறுதிப்படுத்தும் நோக்கில் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவினால் இவ் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறன்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் திருநாடு சுபீட்சம் மிக்கதோர் தேசமாக மலர இத்தீபாவளித் திருநாள் அமையட்டும்

இலங்கைத் திருநாடு சுபீட்சம் மிக்கதோர் தேசமாக மலரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும். என பிரதமர் மகிந்த ராஜபக்ச தீபாவளி திருநாளை முன்னிட்டு விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது

ʼநாட்டைக்கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்குʼ எனும் அரசாங்கத்தின் தேசிய கொள்கைக்கு அமைவாகஇ ஒளி நிறைந்த வளர்ச்சிப் பாதை நோக்கிஇ பல தடைகளைத் தாண்டி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அனைத்துத்துறைகளிலும் நம் தேசம் முன்னேற்றம் காணவேண்டும் என்பதே எம் அனைவரினதும் பெருவிருப்பாகும்.



உலகையே அச்சுறுத்திவரும் கொவிட்19 நோய்த் தொற்றிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பணியோடுஇ பல முன்னேற்றகரமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடுகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். அனைவரதும் அபிலாசைகள் நிறைவேறிஇ இலங்கைத் திருநாடு சுபீட்சம் மிக்கதோர் தேசமாக மலரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும்.

இருள் நிறைந்த பாதைக்கு ஒளி இருந்தால் அதுவே நாம் செல்லும் வழிக்குத் துணையாக அமையும். அருட் தீபமாகிய ஆன்மீக ஞான ஒளியை இறைவழிபாடு மூலம் பெறும் சிறப்பு வாய்ந்த நன்னாளே தீபாவளித் திருநாளாகும்.

இந்துக்கள் அனைவராலும் பக்தியோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் இத்தீபாவளித் திருநாளில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தேசிய ஒற்றுமையைப் போற்ற இது ஒரு சிறந்த நாளாகும். சகல மதங்களிலும் விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்படுவதென்பதுஇ எம்முள் இருக்கும் அறியாமை என்னும் இருள் அகன்று அகவொளி பிரகாசிக்க வேண்டும் என்பதற்கான குறியீடாகும். இந்நன்னாளில் ஏற்றப்படும் தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியில் சிறந்த புரிந்துணர்வுக்கான சமிக்ஞையாகவே எண்ணப்பட வேண்டியது.

மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்துவைத்திருந்த அனைத்து வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத்தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம். இந்த ஒளியை நாம் அணைய விடாமல் பாதுகாத்து மறுபடியும் இருளுக்குள் மூழ்காமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என இலங்கை மாதாவின் பிள்ளைகளை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைவாழ் இந்து மக்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!

# இலங்கை போலிஸ் சேவை ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளராக எஸ்.அருள்ராஜா நியமனம்

( வி.சுகிர்தகுமார்)

இலங்கை பொலிஸ் சேவை ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணப் பணிப்பாளராக 36 வருட அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இலங்கை நிருவாக சேவையின் விசேடதர சிரேஸ்ட அதிகாரியான எஸ்.அருள்ராஜா ஜயா நியமிக்கப்பட்டுள்ளார்.



இவருக்கான நியமனத்தை இலங்கை பொலிஸ் சேவை ஆணைக்குழுவானது அதன் தலைமையகத்தில் வைத்து நேற்று வழங்கியது.

ஒன்பது மாகாணங்களுக்கான பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் நியமிக்கப்பட்ட இரு தமிழர்களில் இவரும் ஒருவர் என்பதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

எல்லோருடனும் அன்பாகவும் எளிமையாகவும் நட்புறவுடன் உறவாடும் அரச சேவையின் உயர் அதிகாரியான இவர் 1961 இல் மட்டக்களப்பு மாங்காடு கிராமத்தில் பிறந்து மாங்காடு சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை பயின்று உயர்கல்வியை செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.

இதேநேரம் மாங்காடு பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் நிருவாக சேவை அதிகாரியான இவர் பொது நிருவாக துறையில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவை இந்தியா காமராஜர் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தார்.

1984ஆம் ஆண்டு ஆசிரியராக குருநாகல் மாவட்ட பாடசாலை ஒன்றில் ஆரம்பித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியராக இணைந்து 1991 ஆம் ஆண்டுவரை தொடர்ந்தார். இந்நிலையில் 1991ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்திபெற்று 20 வருடங்களாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் உள்ளிட்ட அம்பாரை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பிரதேச செயலாளராக கடமையாற்றினார். இதில் 09 வருடங்கள் ஆலையடிவேம்பில் கடமையாற்றியமையும் இக்காலத்தில் சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளையும் பெற்றுக் கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் 2010 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்திற்கு நியமனம் பெற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் உள்ளிட்ட பல பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலாளராகவும் பணியாற்றிய அவர் 2011 ஆம் அண்டு பதவி உயர்வு பெற்று திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக 201% வரை சேவை புரிந்தார்.

தொடர்ந்து 201% ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெறும்வரை சிறுதொழில் முயற்சியாண்;மை அமைச்சு மற்றும் பொருளாதார அமைச்சு, பிரதேச அபிவிருத்தி அமைச்சு. புனர்வாழ்வு அமைச்சு, திறைசேரி இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சு, போக்குவரத்து அமைச்சுக்களில் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றினார். மேலும் மேற்படிப்பிற்காக புலமை பரிசில் மூலம் இந்தியா ஜேர்மனி தாய்லாந்து மலேசியா இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு சென்று பொது நிருவாக துறையில் தேர்ச்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# கந்தளாயில் அனுமதிப்பத்திரமின்றி 34 மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற இருவர் கைது

(எப்.முபாரக் )

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் முதிரை மரக்குற்றிகளை கொண்டு சென்ற இருவரை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வட்டுக்கச்சி,வான்எல பகுதியைச் சேர்ந்த 34,மற்றும் 42 வயதுடைய இருவரே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் கந்தளாயிலிருந்து வட்டுக்கச்சி பகுதிக்கு அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரமொன்றில் 34 மரக்குற்றிகளை கொண்டு சென்ற போதே கந்தளாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மரக்குற்றிகளுடன் சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்துள்ளதோடு கந்தளாய் நீதிமன்றநீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பேசாலையில் கோட்டும் மழையில் சேமக்காலையில் ஆத்துமாக்களுக்கு நினைவேந்தல்



( வாஸ் கூஞ்ஞ)

கத்தோலிக்க திருச்சபையானது நவம்பர் மாதம் இரண்டாம் திகதியை இவ்வுலகில் வாழ்ந்து மரணித்த ஆத்துமாக்களை நினவுகூறும் நாளாக அனுசரித்து வருகின்றது.

இவ் தினத்தை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கின் சேமக்காலையில் மாலையில் பெரும் இடி முழக்கங்கள் மற்றும் பலத்த கொட்டும் மழையில் பங்கு தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற திருப்பலி கொண்டாட்ட வழிபாட்டில் மக்கள் பங்குபற்றுவதை படங்களில் காணலாம்.




# தீபாவளி என்பது எமது மக்களுக்கு இம்முறையும் கறுப்பு தீபாவளி தான்

## ராஜாராம் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

தோட்ட நிர்வாகங்களின் அடாவடி அதிகரித்துள்ளது. மறுபுறத்தில் பொருட்களின் விலைகளும் உச்சம் தொட்டுள்ளன. இதனால் நிம்மதியாக வாழ முடியாத நிலைமை மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தீபாவளி என்பது எமது மக்களுக்கு இம்முறையும் கறுப்பு தீபாவளிதான் என்று மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான ராஜாராம் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ʼ மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக் கூறப்பட்டாலும் அது வழங்கப்படுவதில்லை. தொழில் சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. அடக்குமுறைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டுவருகின்றன. இதற்கிடையில் நாளாந்தம் பொருட்களின் விலைகளும் அதிகரித்துவருகின்றன. இதனால் நிம்மதியாக வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இம்முறை தீபாவளிகூட கறுப்பு தீபாவளியாகவே அமையப்போகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக நரகாசூரனைவிடவும் மோசமான சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டுவருகின்றன என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இந்த அரசாங்கத்தின்கீழ் தேசிய வளங்கள் விற்கப்படுகின்றன. இன்று இளைஞர்கள் வெளிநாடுகளை நோக்கி படையெடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

அதேவேளை, கடந்த மாகாண சபைத் தேர்தலில் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். கட்சி அனுமதி வழங்கினால் இம்முறையும் போட்டியிடுவேன். அந்த அனுமதி கிடைக்கும் என நம்புகின்றேன். கட்சிக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றேன்.ʼ என்றார்.

## சிங்கள பௌத்த அரசை உருவாக்கி

# தமிழ் பேசும் சமூகத்தவர்களை மேலும் ஒடுக்குவதற்காக ஞானசாரதேரர் தலைமையில் செயலணியா?

பேரின அடிப்படைவாத வரலாற்றில் தமிழ் பேசும் சமூகங்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கும் மூன்றாவது விகாரமான தப்பான செயற்பாடுதான் ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியும் அதன் தலைமையும் என்பதைத் தமிழ் பேசும் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.ஜனநாயகப்பண்பான 19வது திருத்தத்தை அகற்றவும் 20வது திருத்தத்தை ஆக்கவும் சலுகைகளுக்காகக் கண்களை மூடிக்கொண்டு கையுயர்த்திய தமிழ்பேசும் பிரதிநிதிகள் பெற்றுத்தந்த தண்டனையைத் 26 சதவீத தமிழ்பேசும் மக்கள் அனுபவிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.கைதூக்கியவர்களுக்குக் கிடைத்த சலுகைகளால் அவர்களுக்குக் கொண்டாட்டம்.தமிழ்பேசும் மக்களுக்குத் திண்டாட்டந்தான் மிச்சம்.



சிங்கள பௌத்தமய அடிப்படைவாதச் சிந்தனையின் அடிப்படையில் இயங்கும் அடிப்படைவாத அரசாங்கங்கள் வரலாற்று ரீதியாகப் பல தவறுகள், தப்புகளைச்செய்து வந்துள்ளன. அதன் மூலமாக தேசிஐக்கியம், பல்லின சமூகங்களிடையிலான நல்லிணக்கம், அபிவிருத்தி, ஜனநாயக உரிமைகள், மனித விழுமியங்கள் என்பவற்றைத் தொலைத்ததன் மூலமாக நாட்டை ஆட்சியாளர்கள் குட்டிச்சு வராக்கியுள்ளனர்.இப்படியான இக்கட்டான சூழலிலும் அடிப்படைவாதம் விகாரம் பெற்று விபரீதமாகவும், விசமத்தனமாகவும் உருத்திர தாண்டவம் ஆடிக் கொண்டே இருக்கிறது.ஆக்க சிந்தனைகளை விட அழிவுச் சிந்தனைகளுக்கான களங்கள் ஆட்சியாளர்களால் திறக்கப்படுகின்றன. பல்லின, பன்மத மக்கள் வாழும் நாடுகளை ஆட்சி செய்கின்ற தலைவர்கள் ஓரின வாதியாகவோ ஒரு மதவாதியாகவோ இருக்கக்கூடாது. சிங்கப்பூரில் லீக்குமானியூ, யூகோஸ்லாவியாவில் மாஷல்டிட்டோ பல்லிசைமூக ஆளுமையைக் கொண்டிருந்தார்கள். ஓரினவாதிகளாக இருக்கவில்லை. யூகோஸ்லாவியைச் சிதைத்துப் பிளவுபடுத்திய ஸ்லபோடான் மிலோசபிக் ஓரின சேர்பிய சிந்தனையாளராகவும்,இனவாதியாகவும் இருந்ததால் அந்த நாடு இல்லாமல் சிதைந்து போயிற்று. இப்போது அந்த நாடு பல நாடுகளாகப் பிளவடைந்துள்ளது.பின்னர் அவர் புரிந்த இனப்படுகொலைகளுக்காக கைது செய்யப்பட்டு சர்வதேசக்குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் போதே சிறையில் மரணித்தார் என்பது வரலாறு.

தற்போதைய இலங்கை ஜனாதிபதி சிங்கள பௌத்த சிந்தனையாளராகச் செயற்படுகிறார். அவர் பகுத்தறிவைப் பயன்படுத்துவதைவிட அடிப்படைவாத பௌத்தறிவையே பயன்படுத்துகின்றார். அதற்கு உதாரணங்களாகப் பலவற்றைக் கூறலாம். தொல்லியல் ஆணைக்குழு,ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஆணைக்குழு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஜனாதிபதியின் ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி மூலமாக என்ன நடக்கப்போகிறது? அதன் பிரதிபலிப்புகள் எப்படியாக அமையப் போகிறது என்பதைப் பார்ப்பதற்கு முன்பாக இதற்கு முன்பும் இப்படியான தப்புகள் நடந்துள்ளன என்பதை வரலாற்றில் இருந்து அறிய முடியும். 1956 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைப் முதற்தடவையாகக் கைப்பற்றியவுடனேயே வரலாற்றுத் தப்பினைச்செய்தது.அதுதான் 24 மணித்தியால கால இடைவெளிக்குள் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொணர்ந்து இந்த நாட்டினைச் சிங்கள அரசு என்று காண்பிக்க முடிவு செய்தமையாகும்.அதன் பின்னர் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக பண்டா செல்வா ஒப்பந்தத்தினைச் செய்தார். அந்த ஒப்பந்தத்தினை அவரே கிழித்தெறிந்தார்.1958 இல் தமிழர்களுக்கு எதிரான இனவன்முறையைத் தூண்டினர்.1000 அப்பாவித் தமிழ் மக்கள்வரை பேரினவாதிகளால் கொல்லப்பட்டார்கள்.அவர்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அக்கலவரத்தின் போது பாணந்துறையில் இந்துக் குருக்கள் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டார். அவரது மனைவி எரிக்கப்பட்ட நிலையில் உயிர் தப்பினார். அந்தக் குருக்களின் மனைவியது எரிகாயங்களை தாயோடு சிறுவனாக இருந்த பிரபாகரன் பார்த்திருந்தார். அச்சிறுவன் மனதில் சிங்களவர் பற்றிய எதிர்மறையான மனப்பான்கு பதிவாகியது. அதன் பின்னரும் சிங்கள ஆட்சியாளர்களின் அடிப்படைவாத வக்கிர செயற்பாடுகள் பிரபாகரன் என்ற சிறுவனை தீவிரப் போராளியாக மாற்றியது. அதன் விளைவுகளை இந்த நாடு 30 ஆண்டுகள் யதார்த்தமாக அனுபவித்தது. ஆயின் தமிழ் இளைஞர்கள் புத்தகங்களைக் கைவிட்டு புத்தாயுதங்களை ஏந்துவதற்கு பண்டாரநாயக்கவின் தனிச்சிங்கள மொழிச்சட்டம் ஆரம்பக்கட்டமாக அமைந்தது. இதனைச் சிங்களத் தலைவர்கள் மேற்கொண்ட முதலாவது பாரிய தப்பாகக்கூற முடியும்.

இரண்டாவது பாரிய தப்பினை 19%2 டாம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மேற்கொண்டார்.மொழியால் இந்த நாட்டினை பண்டாரநாயக்க சிங்களநாடு என்று காட்ட முனைந்தார். அவரது மனைவியான ஸ்ரீமா இந்த நாட்டினை சிங்கள பௌத்த நாடு என்று காண்பிக்கக் கூடிய விதத்தில் தனிச்சிங்களத்தை அரச மொழியாக்கியதுடன் பௌத்த மதத்தை அரச மதமாக்கினார். தமிழர்களின் கல்வியைத் தடுப்பதற்காகப் பல்கலைக்கழகத் தரப்படுத்தல் சட்டத்தினை நிறைவேற்றினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆறம்சக் கோரிக்கையை நிராகரித்தார். இதன் விளைவாக தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்துமாறு 'ரீமாவால் மறைமுகமாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்றும் கூறலாம்.இவ்வாறாக பண்டாரநாயக்கவும், 'ரீமாவும் சிங்களமயமாக்கல்,பௌத்தமயமாக்கல் என்னும் அடிப்படைவாத ஆயுதங்களால் இனநல்லிணக்கத்தைச் சீர்குலைத்து இந்து சமுத்திரத்தின் முத்தான நாட்டினை இரத்தம் சொட்டும் இறைச்சித்துண்டுகளாக மாற்றினர்.

அதே போன்ற மூன்றாவது வரலாற்றுத் தப்பினைத் தற்போதைய பொதுசனப் பெரமுன அரசாங்கம் செய்கிறது. பேரின சிங்கள பௌத்த அடிப்படைவாதியான சர்ச்சைகளின் பிறப்பிடமான ஞானசாரர் தலைமையில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணியை உருவாக்கி அதன் மூலமாக ஜனநாயக சோசலிசக் குடியரசு என்ற இலங்கையைச் சிங்கள பௌத்தக்குடியரசு நாடாக மாற்றியமைக்க முனைப்புடன் செயற்படுகின்றார்கள். இந்த ஆணைக்குழுவில் 13 உறுப்பினர்களில் பெயரளவுக்கு 4 முஸ்லிம்களை நியமித்துள்ளார்கள். அவர்களை வெறும் பொம்மைகளாகவே இருக்கப் போகின்றார்கள். உண்மையாகச் செயற்பட்டால் அவர்கள் விலகவேண்டி ஏற்படலாம் அல்லது விலக்கப்படுவார்கள். அதே வேளை இந்த ஆணைக்குழவில் தமிழர்களோ, கிறிஸ்தவர்களோ, பெண்களோ இடம் பெறவில்லை. அவ்வாறு இடம் பெற வேண்டிய அவசியமும் இல்லை. அவ்வாறு இடம்பெற்றாலும் ஆளுங்கட்சியிலுள்ள தமிழ்பாராளுமன்ற உறுப்பினர்கள் போல் வாய்பொத்தி கைகட்டி தலையாட்டுகின்றார்களாகவே இருக்க முடியும். வேறு ஒன்றையும் சாதிக்க முடியாது. பல்லின மக்களின் இனப்பிரச்சினைகள், கலாசாரப் பிரச்சினைகள், உரிமைப் பிரச்சினைகள் எதனையும் தீர்ப்பதற்கான உள்நாட்டுப் பொறிமுறை முற்றுமுழுதாக அற்றுப்போன நிலையில் தான் இலங்கை அரசு இன்று உள்ளது.



ஜீ.ஸ்ரீநேசன்,
முன்னாள் பா.உ,
மட்டக்களப்பு

ஒரே நாடு ஒரே சட்டம்ன என்ற சிங்கள பௌத்த உக்கிர வக்கிர சிந்தனைத்தளத்தில் இருந்து வெளிவரக்கூடிய சிந்தனைகள் பிரதிபலிப்புகள் இவைதான்.

1. சிறுபான்மைத்தமிழ் பேசும் இனங்கள் இந்த நாட்டில் இரண்டாந்தர மூன்றாங்கரப் பிரசையாகவே வாழ வேண்டும். முடியாவிட்டால் நாட்டைவிட்டு வெளியேறலாம்.

2 தமிழ் பேசும் இனத்தைத் தொடர்ந்தும் பிரித்தாளுவதற்கான வழிமுறையாக இது அமையும்

3 இலங்கையின் தேதசிய ஐக்கியம், தேசிய நல்லிணக்கம் என்பவற்றுக்கு மரண அடியாக இது அமையும்

4 தமிழர்களே பிரிந்து செல்லுங்கள் என்பது சொல்லாமல் சொல்லப்படுகிறது.

5 தீர்வுக்கான உள்நாட்டுப் பொறிமுறை உண்டு என எவரும் நம்ப வேண்டாம், இருப்பதெல்லாம் பிரச்சினைகளை உருவாக்குவதற்கான பொறிமுறைகள்தான்.

6 பிற்போக்குவாதம், பழைமை வாதம் ஒன்றுதான் இந்த நாட்டையும் மக்களையும் இன்றுவரை ஆள்கிறது.

% 'பந்தயம் பிடியுங்கள் திருந்தவே மாட்டோம்'என்ற அடிப்படை வாதத்தில் இருந்து இவர்கள் விலகார்கள்.

8. இலங்கையில் இருப்பதெல்லாம் சிங்கள பௌத்த பெரும்பான்மை என்கின்ற ஓரின ஒருமத பாரபட்ச ஜனநாயகந்தான்.

9. இலங்கைக்கான தீர்வுகள் அனைத்தும் சர்வதேசப் பொறிமுறை மூலமாகவே சாத்தியப்படும்.

10தமிழ் பேசும்மக்களை ஆளக்கூடிய, சமத்துவமாக வாழச்செய்யக்கூடிய மனப்பாங்கு,தகுதிகள் சிங்கள ஆட்சியாளர்களிடம் இல்லை.

11 எனவே வடக்கு கிழக்கு மக்கள் சர்வசன வாக்குரிமை மூலமாகத்தமது தலைவிதியை தாமே தீர்க்க வழியைத் தேடுங்கள்.

12 தமிழ் பேசும் இனங்களைச் சேர்ந்து சமத்துவமாக வாழவும் விட மாட்டோம்,பிரிந்து தனியாக வாழவும் விட மாட்டோம்.

13தமிழர் அரசியலில் உரிமைவாதிகள் நியாயவாதிகளுக்கு இடமில்லை,அரசியல் சலுகைவாதிகள் இலாபவாதிகள் வரலாம்.அவர்கள் தலையாட்டிகளாகவும்,கையுயர்த்திகளாகவும் இருந்து தனிப்பட்ட சலுகைகளை அனுபவிக்கலாம்.தமிழ் மக்கள் பற்றிப்பேசக்கூடாது.

இதுதான் இன்றைய பொதுசனப்பெரமுன அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.அதற்கமைவாகவே அரசின் நகர்வுகள் செல்கின்றன.இதனை ஆமாம் சமிகளான சலுகைவாதிகள் மாத்திரமே அங்கீகரிப்பார்கள்.




அன்பான வாசகர்களுக்கு



இம்மாதம்
தொடக்கம் சுபீட்சம்
நிகழ்நிலைப்பத்திரிக்கை
சிலவாரங்களுக்கு
வாரத்தில் திங்கள்,
புதன், வெள்ளி ஆகிய
தினங்களில்
மாத்திரமே வெளிவரும்.
உடனடிச்செய்திகளுக்கு
www.supeedsam.com
எனும் எமது
செய்தித்தளத்துடன்
இணைந்திருங்கள்



# எவரும் கண்டு கோள்ளாத ஆணைக்குழுக்கள்

வீட்டில் வளர்க்கப்படும் மாட்டின் முதுகில் சூடு குத்தப்பட்டு அதனை நடமாடவிட்டதன் பின்னர் எவரும் அதனை கண்டு கொள்வதில்லை. அது சுதந்திரமாக நடமாடி திரியும். நமது தோட்டத்திற்குள் நுழைந்து பயிர்களை மேய்ந்தமைக்காக அதற்கு எதிராக எவரும் பொலிஸில் முறைப்பாடு செய்வதுமில்லை அது இறந்தாலும் எவரும் அதற்காக கவலைப்படுவதில்லை அது உயிர் வாழ்வதாக கருதி எவரும் விசேஷமாக மகிழ்ச்சியடைய போவதுமில்லை.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கைவிடப்பட்ட முதுகில் சூடு குத்தப்பட்ட மாட்டை போன்றதாகும். குறைந்தபட்சம் தேர்தலில் அதிகாரத்தை கைப்பற்ற எதிர்பார்க்கும் அரசியல் கட்சியொன்று கூட , இப்போது அரசசேவை இலஞ்ச ஊழல், பொதுப் பயன்பாடுகள் அரசகரும மொழிகள் எல்லை நிர்ணயம் போன்ற ஆணைக்குழுக்கள் பற்றி கதைப்பதில்லை. ஞானசார தமிந்தசில்வா போன்றவர்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் கூட இதற்கு வழங்கப்படுவதில்லை. சிறந்த மாவட்ட செயலாளராகவும் கௌரவத்துக்குரிய சுங்கப் பணிப்பாளர் நாயகமாகவும், செயலாளராகவும் பணியாற்றிய பி.எஸ்.எம். சார்ள்ஸ் வடமாகாண ஆளுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜீவன் தியாகராஜா தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து வடமாகாண ஆளுநராக நியமிக்கப் பட்டுள்ளார். அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தாததைப் போன்று இந்த இடத்திலும் இந்த விடயத்தில் பற்றி சுதந்திரமான முறையில் கருத்துக்கள் அறியப்படவில்லை . இதுபற்றி அறிக்கைகளாே பாராளுமன்றகூற்றுக்களோ குறைந்தபட்சம் நகைச்சுவகைளோ கார்ட்டூன்களாே வெளியாகவில்லை .

கடந்த வாரம் தேர்தல் ஆணைக்குழுவில் ஊடகவியலாளர் மாநாடொன்று நடைபெற்றது அதன்போது எவரும் இந்த நியமனம் பற்றி கேள்வி எழுப்பவில்லை. தேர்தல் ஆணைக்குழுவின் இந்த ஊடகவியலாளர் மாநாடானது நாட்டின் வரலாற்றில் எந்த ஒரு பிரதான அலைவரிசையிலும் செய்தியாகக் கூட இருக்கவில்லை. ஏனைய ஆணைக்குழுக்களை விட தேர்தல் ஆணைக்குழு அரசியலுக்கு மிகவும் முக்கியமானது என்பதனால் இதனை எழுதுகிறேன் . முன்னாள் போராளியான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மிக நெருங்கிய சகாவான டயஸ்போராவின் தலைவருமான ஜீவன் தியாகராஜா தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக அரசியலமைப்பின் 14வது உறுப்புரையின் 103வது சரத்துக்கு (தொழில் வான்மை நிர்வாகம் கல்வி ஆகிய துறைகளில் உயர் நிலையை அடைந்திருக்க வேண்டும் என்ற விதிமுறைக்கு )புறம்பாக நியமிக்கப்பட்டார். கஃபே , மனித உரிமைகள் கேந்திர நிலையம், ஊழல் ஒழிப்பு முன்னணி, உமா ஒய போராட்டக்குழு என்பனவற்றின் உறுப்பினரான கீர்த்தி தென்னக்கோன், ஆளுநராக நியமிக்கப்பட்ட போது சமூக ஊடகங்களில் ஆச்சரியமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. சுமார் 112 பதிவுகளை நான் சேகரித்து வைத்திருக்கின்றேன். தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவரும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் இதில் அடங்குகிறார்கள் . ஒக்டோபர் 2%ம் திகதி சேதன பசளை பற்றி நான் எழுதியிருந்த கட்டுரைக்கு தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவர் நையாண்டியாக எழுதியிருந்தார். முப்பத்தையாயிரம் தேர்தல் கண்காணிப்பாளர்களில் ஒருவரான கீர்த்தி தென்னக்கோன் மீதிருந்த கரிசனையில் ஐந்தில் ஒரு பகுதி கூட ஜீவன் தியாகராஜாவின் மீது ஏன் இருக்கவில்லை. ஆளுநர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட திருமதி சார்ள்ஸ் பற்றி ஏன் கவனம் செலுத்தவில்லை. இளம் ஊடகவியலாளர் சங்கம் கூட இது பற்றி ஏன் கவனம் செலுத்தவில்லை. சுமையிழுக்கும் மாடுகள் இவ்வாறு கைவிடப்பட்ட மாடுகளாக மாறும் போது அது தோட்டத்துக்குள் நுழையும் வேளையில் எவரும் பதற்றம் அடைவதில்லை, இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் முன் மாதிரி இந்திய தேர்தல் ஆணைக் குழு ஆகும். இந்தியாவின் 11 ஆவது தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி எம் எஸ் கில் (1996 2001) பதவியில் இருந்து விலகி % வருடங்களின் பின்னர் தேர்தல் மூலம் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார் . தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு அமைச்சரான வெற்றி சமூகத்தில் மாறுபட்டு கலந்துரையாடல்களை ஏற்படுத்தியது .தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று முகநூல் ஊடாக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டன. அதற்கு தேர்தல் ஆணையாளர் இவ்வாறு பதில் அளித்தார். மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான் ஜனாதிபதித் தேர்தலிலோ பொது தேர்தலிலோ போட்டியிடப் போவதில்லை, அவ்வாறான கோரிக்கைகளையும் முன்வைக்க வேண்டாம் என்று நான் கோரிக்கை விடுக்கிறேன், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த ஒருவர் தேர்தலில் போட்டியிடுவது தார்மீகத்திற்கு முரணானதாகும் என்று கருதுகிறேன் என்பது எனது நிலைப்பாடாகும் என கூறினார்.

தேர்தல் ஆணைக்குழு என்றும் முன்மாதிரியாக செயல்பட வேண்டும். ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் நிபந்தனையுடனேயே ஜீவன் தியாகராஜா வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். மஹிந்த தேசப்பிரியவின் முன்மாதிரி ஜீவன் தியாகராஜாவுக்கு பொருந்துவதாக அமையவில்லை நாட்டு மக்களுக்கு அது பொருந்துவதாகவும் அமையவில்லை. 2019ஆம் ஆண்டு தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவருக்குக்கு இருந்த முக்கியத்துவம் கூட 2021ஆம் ஆண்டு தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு முக்கியமானதாக அமையவில்லை. 17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு பெபரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரோட்ரிகோவின் பெயர் முன்மொழியப்பட்ட போது இதைவிட அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் கூடுதலாக கரிசனை காட்டின.

அன்று தனி நபராக இருந்த கிங்ஸ்லி ரோட்ரிகோவுக்கு இருந்த முக்கியத்துவம் இன்று சால்ஸ் தியாகராஜா மாற்றத்திற்கு இல்லை. அவ்வாறு இல்லையெனில் இந்தியாவின் புகழ்பெற்ற ஒன்பதாவது பிரதம ஆணையாளரான வீ எஸ் ராம தேவி கர்நாடகா மாநிலத்தில் ஒரே ஆளுநராக நியமிக்கப்பட்டார் .ராம தேவிக்கு நல்லதாக இருப்பின் தியாகராஜாவுக்கு தீமையாக அமையாது என்று முழு நாடும் சிந்திப்பதாக இருக்கவேண்டும். 2019ஆம் ஆண்டு அன்றைய தேர்தல் ஆணைக்குழு கீர்த்தி தென்னகோனினால் கபே அமைப்பின் கண்காணிக்கும் அதிகாரத்தை வரையறுத்தது. தற்காலிகமாக இடைநிறுத்துவதாகவும் அறிவித்தது இப்போது தேர்தல் ஆணைக்குழு வும் அதன் (உறுப்பினர்களும்) யாராலும் கண்டுகொள்ளப் படாமையினாலாே என்னவோ அதே ஆணைக்குழு ஜீவன் தியாகராஜாவை ஆளுனர் என்ற ரீதியில் வரவழைத்து நினைவுச் சின்னம் ஒன்றையும் பரிசாக வழங்கியது. பதவி உயர்வு பெற்று செல்கின்றவருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தது .கொவிட் பரவல் இல்லாவிட்டால் அவர்கள் இசை நிகழ்ச்சி ஒன்றையும் ஒழுங்கு செய்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. தேர்தல் ஆணைக்குழுவின் கட்டடத்தில் ஐந்து ஆணையாளர்களின் படங்கள் இருந்தாலும் ஆறாவது ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் படம் அங்கு காட்சிப்படுத்தப்படவில்லை என்பது எவருக்கும் நினைவில் இருக்காது .தேர்தல் ஆணைக்குழுவின் தொடர்ச்சி என்ற விடயமானது முன்னாள் தேர்தல் ஆணையாளரிடமிருந்தேனும் ஆரம்பிக்கப் படுவது அவசியமாகும். கடந்தகால சம்பவம் ஒன்றை ஞாபகமூட்டுகிறேன் பதுளை மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் உதவித் தேர்தல் ஆணையாளராக இருந்த டீ கே தசநாயக்க 19%%ஆம் ஆண்டில் அவரது திறமை நேர்மை பக்கசார்பின்மை ஆகிய பண்புகளினால் அனுராதபுர மாவட்ட செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் அமைச்சின் செயலாளராக பணியாற்றிய அவர் ஓய்வு பெற்ற போதும் மத்திய மாகாணத்தின் ஐந்தாவது ஆளுநராக நியமிக்கப்பட்டார். சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய அதிகாரிகள் மீது முன்பிருந்த அரசியல்வாதிகள் விருப்பம் கொண்டிருந்தார்கள். தசநாயக்கவின் நியமனத்தோடு சால்சின் தலைவிதி தியாகராஜாவின் நியமனம் என்பனவற்றை அளவிடு செய்யும் பொறுப்பை உங்களுக்கு விட்டுவிடுகிறேன். ஆளுனர் பதவியானது உத்தியோகபூர்வ பதவிநிலையில் தேர்தல் ஆணைக்குழுவை விட உயர்ந்த இடத்தில் உள்ளது என்பதை இங்கு வழங்கப்பட்டுள்ள செய்தியின் மூலம் தெளிவாகிறது .அதாவது ஜீவன் தியாகராஜாவை போன்று பதவிகளை நோக்கிச் செல்ல தேர்தல் ஆணையாளர்களுக்கு வாய்ப்பு காணப்படுகிறது. தேர்தல் ஆணையாளர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெளிநாட்டு ராஜதந்திரிகளாக நியமிக்கப்படும் சம்பிரதாயம் காணப்பட்டது. முன்னாள் தேர்தல் ஆணையாளர் பீலிக்ஸ் டயர்ஸ் அபேசிங்க அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார் பியதாச இத்தாலி தூதுவராக அனுப்பப்பட்டார் சந்தராந்த சில்வா பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றியதன் பின்னர் கனடாவுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப் பட்டார். ஆனால் கனடேிய அரசாங்கம் அவரது நற்சான்றிதழ் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை ( அருள்பிரகாசம் பண்டாரநாயக்கவின் விருப்பப்படி தேர்தல் தினத்தை மாற்றியமைப்பதற்கான யோசனையை நிராகரித்தமையினால் சகல தேர்தல் ஆணையாளர்களுக்கும் கிடைக்கவேண்டிய இரண்டு வருட பதவிக்காலம் அவருக்கு கிடைக்கவில்லை) மஹிந்த தேசப்பிரிய பதவிவகித்து வருகின்றமையினால் அவர் தொடர்பில் எந்த விடயத்தையும் இங்கு எழுதவில்லை.




திருமதி சால்ஸ் முன்னாள் தெரிவத்தாட்சி அதிகாரி ஆவார். வாக்குகளை பதிவு செய்யும் அதிகாரி ஈபிடிபி கருணா பிள்ளையான் ஈரோஸ் அமீர் அலி ஹிஸ்புல்லாஹ் ,அமீர் அலி ,ரிசாத் பதியுதீன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு இராயப்பு ஜோசப் ஆண்டகை, போன்று தரப்புகளை முகாமைத்துவம் செய்த மாவட்ட செயலாளர் ஆவார்

ரிசாத் பதியுதீன் 2010ஆம் ஆண்டில் அவுட் ஒப் பவுண்டி செய்தது எனக்கு நினைவில் இருக்கிறது 2010ஆம் ஆண்டில் இலங்கையின் மிகப்பெரிய பதாதையாக இருந்த பிள்ளையானின் பதாகையை வெட்டியதையும் அறிவேன் .இராயப்பு ஜோசப் ஆண்டகையுடன் முரண்படுவதையும் நினைவில் கொள்கின்றேன். 2010ஆம் ஆண்டில் வாக்காளர்களுக்கு இலவசமாக போக்குவரத்து வசதிகளை வழங்கியதையும் அறிவேன்.

யுத்ததத்தோடு நிர்வாகம் செய்த அவர் எல்ரிரிஈயிடமிருந்து உயிரையும் பாதுகாத்துக் கொண்டதோடு அரசாங்க தொழிலையும் தக்கவைத்துக் கொண்டார்.

பெண்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட மாட்டார்கள் என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார் .தபால் திணைக்களம் அதன் உயர் பதவிக்கு ஒருவரைத் தேடிக் கொண்டிருந்த வேளையில் 35 சுங்க அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டாலும் அவர்களை வெளியேற்ற வேண்டாம் என்று கூறிய பணிப்பாளர் நாயகம் இவராவார். சுகாதார அமைச்சில் பல வருடங்களாக நிலவிய முகாமைத்துவம் தொடர்பான நெருக்கடிகளை ஒரு மாதத்திற்குள் இவர் தீர்த்து வைத்தார். அவர் இருபது வருடங்களாக நிறுவனங்களின் தலைவராக பணியாற்றினார். அவருக்கெதிராக எந்த ஒரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை .ஆனால் இன்று அவர் தேர்தல் ஆணைக்குழுவின் மற்றுமொரு உறுப்பினர் மாத்திரமே ஆவார்.

ஆனால் அதுபற்றி எவரும் இன்று கதைப்பதில்லை. 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் எவராலும் கண்டுகொள்ளப்படாத நிறுவனம் அன்றி வேறு எதுவாகத்தான் இருக்க முடியும் .

அவர் யுத்த காலத்தில் வவுனியா மட்டக்களப்பு மாவட்டங்களில் நிர்வாக ரீதியில் வெற்றி பெற்றார் .யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் சிறந்த கோருவதை பெற்றார். வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் எந்த ஒரு அரசியல் முகாமையும் சாராமல் செயற்பட்டமையினால் அவர் வட மாகாணத்திலிருந்து நீக்கப்பட்டார். வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துசேன அந்தப் பதவிக்கு சார்ல்சின் பரிந்துரையால் நியமிக்கப்படவில்லை. வடமாகாணத்தின் பிரதம செயலாளராக தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தெரியாத ஒருவர் நியமிக்கப்பட்ட போது சார்ல்ஸ் பதிவியிழந்தார் . விசேட தரத்திலான நிர்வாகசபை 14 பதவிகள் ( மாகாண சபைகள் 8+ மாவட்ட செயலாளர்கள் 5) ஆகும் இந்தப் பதவிகளில் நிர்வாக மொழிகள் தெரியாத 1998ம் ஆண்டுக்குரிய கனிஷ்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்ட தன் மூலம் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பற்றி நிர்வாக அதிகாரிகளேனும் பேசுவதில்லை.

திருமதி சார்ல்ஸ் கௌரவமான முறையில் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. திருமதி சார்லஸ் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவதும் ஒரே ஒரு பெண்ணும்மாவர் என்ற அடிப்படிப்படையில் மாத்திரம் அவர் முக்கியமாக கருதப்படவில்லை.

திருமதி சால்சின் பெயர் அங்கீகரிக்கபடுவதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழு அற்புதமான ஒரு வேலையை செய்திருந்தது .ஓய்வு பெற்ற தமிழ் இனத்தைச் சேர்ந்த நிலஅளவையாளர் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரின் பெயரை ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவிக்கு பரிந்துரைத்து கடிதம் ஒன்றை தயாரித்திருந்தது. ஆணைக்குழுவுக்கு தமிழ் பிரதிநிதித்துவம் என்ற ரீதியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது (அரசியலமைப்பில் அவ்வாறானதொரு ஏற்பாடு இல்லை) ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் மற்றுமொரு ஆணைக்குழு உறுப்பினரை பரிந்துரைக்கும் இந்த முறை புதிய சம்பிரதாயமாகும். இதுபற்றி யாரும் கோபமடையவோ நையாண்டி செய்யவாே கேலி செய்யவோ மாட்டார்கள். மனிதர்களின் உள்ளங்களை நோகடிக்காத வகையில் எழுதுவதற்கு முயற்சிக்கின்றேன். இந்த கட்டுரையின் மூலம் ஆணைக்குழுவின் எந்த ஒரு ஆணையாளரும் மனமுடைந்து கொள்ள மாட்டார்கள் என்று நான் நம்புகின்றேன்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கைவிடப்பட்ட மாட்டை போன்று எவருக்கும் பயனற்றதாக இருக்கும் என்பதை அறிந்து அதற்கெதிராக நான் நீதிமன்றத்தை நாடினேன் .என்னால் முடியுமான அனைத்தையும் செய்தேன் எனது அன்றைய எண்ணம் சரியானது என்பதை இப்போது உணர்கின்றேன் .சகல ஆணையாளர்களும் ஆளுநர்களாக மாறினாலும் கூட அது பற்றி எவரும் கதைக்க மாட்டார்கள். ராஜா கொல்லுரே உட்பட சகல ஆளுநர்களும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டாலும் அது பற்றி எவரும் கருத்து கேட்கமாட்டார்கள். சார்ல்ஸ் மற்றும் தியாகராஜாவின் நியமனங்கள் பற்றி விரிவாக நோக்கும் உலகமே மிகவும் அழகாக அமையும்.

ரஜித் கீர்த்தி தென்னகோன்
(முன்னால் ஆளுனர்)

மொழியாக்கம்சுமனாஸ் மகீன்
(கெபே நிறைவேற்று பணிப்பாளர்)




நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com